உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பிலவங்க - ஆடி - 10—8—67 [இதழ் 9

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிங் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

திருக்கூட்டச் சிறப்பு

பலர் அல்லது பல ஒருங்கு கூடியகுழாம், 'கூட்டம்' எனப்படும். ஒருதிறப்பட்ட மக்கள் தனித்தனியிருப்பதை விட, ஒருங்கு கூடுவார்களாயின், அவர்களது பண்பும், பயனும் மிகப் பெரியனவாய்ச் சிறந்து விளங்கும். அதனுல், பெருமக்கள் பலர் ஒருங்கு கூட நேரும் நாளினை உலகிற்கே சிறந்ததோரு நன்னுளாகக் கொண்டு மக்கள் மகிழ்ச்சி எய்துகின்றர்.

கல்வியிற் சிறந்த புலவர் பலர் ஒருங்கு கூடி மனங் கலந்து அளவளாவும் கூட்டம் ஒன்று கிடைக்குமாயின், அதன்கண உண்டாகும் இன்பத்திற்குச் சுவர்க்கலோக இன்பமும் ஈடாகாது என்று நாலடிச் செய்யுள் ஒன்று கூறுகின்றது.

தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்
தும்பர் உறைவார் பதி.

கல்வியுடையார் ஒருங்கு கூடும் கூட்டமே இத்தகைய தாயின், இறைவன் திருவருள்பெற்ற அருளாளர் கூடும் கூட்டத்தின் சிறப்பினைச் சொல்லவும் வேண்டுமோ! அருளாளர் கூடியிருக்கும் கூட்டத்தினை, வாளா 'கூட்டம்' என்று கூருது, 'திருக்கூட்டம்' எனக் கூறுதலே மரபு. இதனை, சேக்கிழார், தமது பெரியபுராணத் தொடக்கத்தில் அடியார்களது பெருமையைத் தொகுத்துக் கூறும் பகுதியை, 'திருக் கூட்டச் சிறப்பு' எனக் குறிப்பிடுதலால் உணரலாம்.

பாரம் ஈசன் பணியலது ஒன்றிலாப் பாங்கினராய சிவனடியார் பலர் ஒருங்கு கூடிய திருக்கூட்டம் ஒன்று திருவாரூர்த் தேவாசிரிய மண்டபத்தில் இருத்தலைக் கண்ட சுந்தரமூர்த்தி நாயனர், 'என்னைத் தனக்கு அடியவனக ஆக்கிக்கொண்ட தியாகேசப் பெருமான், இவ்வடியார்க்கு அடியேனகச் செய்யும் நாள் எந்நாளோ' என எண்ணும் எண்ணமுடையவராய், அவ்வெண்ணத்துடனே தியாகேசர் சந்நிதியை நோக்கி நடந்தார். வேண்டுவார் வேண்டுவதை அருளும் தியாகேசப் பெருமான் அப்பொழுதே அவருக்கு அப்பேற்றினை அருளக் கருதி, அவர் தன்னிடம் வருதற்கு முன்பே தான் அவர்முன் எழுந்தருளினன். அதனைக்கண்ட சுந்தரர் பேரன்புகொண்டு அப்பெருமானது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அவைகளைப் பற்றிக்கொண்டு, 'அடியேனுக்கு இத் திருவடிகளல்லது புகலிடம் வேறு யாதுளது' என்று சொல்லித் திருவடிகளின் பெருமையைப் பலவாறு புகழ்ந்து போற்றினர். தியாகேசப் பெருமான், அப்பொழுது அடியார்களது பெருமையை அவருக்கு அருளிச்செய்த வகை நம் உள்ளத்தில் என்றும் இருத்தத் தக்கது.

பெருமையால் தம்மை ஒப்பார் ; பேணலால் எம்மைப் பெற்ருர் ;
ஒருமையால் உலகை வெல்வார் ; ஊனமேல் ஒன்றும் இல்லார் ;
அருமையாம் நிலையில் நின்ருர் ; அன்பினுல் இன்பம் ஆர்வார் ;
இருமையும் கடந்து நின்ருர் ; இவரை நீ அடைவாய்.

சுந்தரமூர்த்தி நாயனார் எத்தகைய பெருமை உடையவர்! திருக்கைலையில் இறைவனது மற்றொரு வடிவமாய் இலங்கியவர். இவ்வுலகிலும் இறைவன் தானே வந்து வல்வழக்குப் பேசி வலிய ஆட்கொள்ளப்பெற்றவர். பின்னும், 'நம்மை உனக்குத் தோழமையாகத் தந்தோம்' என்று இறைவன் அருளிச்செய்ய, தம்பிரான் தோழராய் விளங்கியவர். இவரே, 'இறைவன் என்னை இவ்வடியார்கட்கு அடியவனாகச் செய்யும் நாள் எந்நாளோ' என்று கருதுவாராயின், அடியார்களது பெருமை நம்மால் அறிந்துரைக்கற்பாலதோ!

'இவரைநீ அடைவாய்' என்று இறைவன் அருளிச் செய்து, 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியும் எடுத்துக்கொடுக்க, அடியார் பலர்க்கும் தனித்தனியே, 'அடியேன்! அடியேன்' என்று திருத்தொண்டத்தொகை பாடத் திருக்கூட்டத்தருகில் செல்லுகின்ற சுந்தரர், 'தூரத்தே திருக்கூட்டம் பலமுறையும் தொழுது சென்றார்' என்று சேக்கிழார் அருளுகின்றார். இதனால் திருக்கூட்டத்தின் சிறப்பு எத்தகையது என்பது இனிது விளங்கும்.

இது பலர் கூடிய கூட்டம். இனி மூவாண்டிலே உலகுய்ய அம்மை அளித்த அருள்ஞானப்பாலுண்ட ஆளுடைய பிள்ளையாரும், அஞ்செழுத்தை ஓதி கல்லே மிதப்பாக் கடலைக் கடந்து கரையேறி, நாணில் அமண் பதகருடன் ஒன்றிய மன்னவன் சூழ்ச்சியைத் திருத்தொண்டின் உறைப்பாலே வென்றவராகிய ஆளுடைய அரசுகளும் சீகாழிப் பதியிலே ஒருங்கு கூடிய கூட்டம் அடியவர்கட்கெல்லாம் அளவிலா இன்பத்தைத் தந்தது. அதனால், அவர்கள் செய்த அரகர முழக்கம் உலகத்தை நிறைத்தது.

"எம்பெருமக் களும்இயைந்த கூட்டத்தில் அரனடியார்
இன்பம் எய்தி
உம்பர்களும் போற்றிசைப்பச் சிவம்பெருகும் ஒலிநிறைத்தார்
உலக மெல்லாம்"

என்ற சேக்கிழார் திருவாக்கைக் காண்க. இவ்விருவரும் திருவீழிமிழலையில் ஒருங்கு கூடி இருந்த கூட்டத்தால் உலகம் பஞ்சத்தால் அழியாது பிழைத்தது என்பதை,

"பாடிய செந்தமி ழால்பழங் காசு பரிசில்பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம் பந்தன் நிறைபுகழான்
நேடிய பூந்திரு நாவுக் கரசொ டெழில்மிழலைக்
கூடிய கூட்டத்தி னல்உள தாய்த்திக் குவலயமே"

எனக் குறிக்கின்றார் நம்பியாண்டார் நம்பிகள்.

இவ்வாறே இவர்கள் இருவரும் திருப்புகலூரில் முருக நாயனாரது திருமடத்தில் எழுந்தருளியிருந்தபொழுது சிறுத் தொண்டரும், திருநீலநக்கரும் அங்கு வந்து உடன் இருந்து மகிழ்ந்தமையை, "உடனுறைவின் பயன் பெற்றார்" என்று குறிப்பிடுகின்றார் சேக்கிழார்.

இன்னும் சேரநாட்டு அரசராய கழறிற்றறிவார் நாயனாரைச் சிவபெருமான் சோழநாட்டில் திருவாரூரில் இருந்த சுந்தரருடன் கூடுமாறு தானே முன்னின்று கூட்டுவித்தருளினார். அதை அந்நாயனார் பின்பு திருக்கயிலையில் சிவபெருமானை நோக்கி, "மருவு பாசத்தை அகன்றிட வன்றொண்டர் கூட்டம் வைத்தாய்" என்று சொல்லி வணங்கினார். இவையெல்லாம் எதனை நமக்கு விளக்குகின்றன? சிவனடியார்களும், சைவ சமயாசாரியர்களும் ஒருங்கு கூடும் கூட்டத்தின் சிறப்பையே விளக்குகின்றன. எனவே, இத்தகைய திருக்கூட்டத்தின் நடுவில் இருக்கப்பெறும் பேறு பெறற்கரும் பேருகும் என்பது தெளிவு. சமயாசாரியருள் ஒருவராய் அறிவாற் சிவனேயான வாதவூரடிகளும் இறைவனிடம், "உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என்றுதான் வேண்டுகின்றார். எனவே, இத்திருக்கூட்டத்தை அவாவி அடைவதே மக்கள் செயற்பாலதாகும்.

பண்டைக்காலத்தில் காணப்பட்ட இத்திருக்கூட்டத்தை நினைவுறுத்தும் வகையில் அண்மையில் தருமையில் காட்சியளித்த திருக்கூட்டத்தின் சிறப்புப் பலரும் அறிந்தது.

தமிழகத்தில் உள்ள சைவ ஆதீன மகாசந்நிதானங்களும், மடாதிபதிகளுமாக எண்மர் திருப்பெருமக்கள், தருமை யாதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் பெருந் திரளான அன்பர் கூட்டம் களிக்க ஒருங்கு எழுந்தருளிய காட்சி என்றும் மறக்க முடியாத இன்னருட் காட்சியாகும். இவர்கள் அனைவரும், தங்கள் தங்கள் ஆதீனத்திலும், திருமடத்திலும் எழுந்தருளியிருந்து சைவமும், தமிழும் தழைக்கச் செய்வதோடு, ஒருங்கு கூடி மக்களை உய்விக்கத் திருவுளங்கொண்டு எழுந்தருளிவந்தமை, மக்கள் உள்ளத் திற்கு மகிழ்ச்சியை மிக வூட்டுவதாய் இருந்தது. இத்திருப் பெருமக்கள் இங்ஙனம் ஒருங்கு கூடி உலகை உய்விப்ப தற்கு வாய்ப்பாக, 'தமிழ்நாடு தெய்விகப் பேரவை' என்னும் அமைப்பினைத் தோற்றுவித்து அதன் வழியே எவ்விடத்தும் சமயப் பிரசாரங்களை நிகழ்த்துதற்கு வழிவகுத்துள்ளமை தமிழ்நாடு செய்த தவப்பயனேயாகும். மக்கள் பலரும் இத்தகைய அருளாளர்களது திருக்கூட்டத்தின் சிறப்பினை உணர்ந்து, அதனைக் கண்டுகளிக்கும் பேற்றைப் பெறுவ துடன், தெய்விகப் பேரவையின் வழியே அவர்கள் காட்டி யருளும் நல்வழியில் சென்று நலம்பலவும் பெற்று உய்வார் களாக.

குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 3 — 00 —

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்க ளது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவரு கிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L., அவர்கள்,

"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

சைவ ஆதீன பரம்பரை

குருவருள்

உலகத்தைப் படைத்த இறைவன், அன்றே உயிர்களுக்கு உய்யும் நெறியையும் காட்டியருளினான். உய்தல் - பிழைத்தல் உண்மை உய்தியாவது, பிறவித் துன்பத்தினின்றும் நீங்கி இறைவன் திருவடி இன்பத்தைப் பெறுதலேயாகும். எனினும், தொடக்கத்திலேயே இந்நெறியை உயிர்கள் பெறமாட்டாதன வாய் இருக்கின்றன. அதனால், அவைகள் முதற்கண் பிறப்பு நிலையில் நின்று சிறிய இன்பங்களை நுகர்ந்து, பின்னர் அச்சிறிய இன்பங்களை வெறுத்துப் பேரின்பத்தை நாடும் வகையில், இறைவன் அவைகட்கு இருவகையான நெறிகளை வகுத்துள்ளான், அவற்றுள் முதலாவது அறநெறி. இஃது இம்மை மறுமைகளில் நல்வாழ்வை அடைதற்குரிய வழியாகும். நன்மை தீமைகளைப் பகுத்துணரும் உணர்வு படைத்த மக்களுயிர், தீயவற்றின் நீங்கி நல்லவற்றிற்செல்வதே அறநெறி. வேதத்திற் சொல்லப்பட்ட நெறிகள் பலவும் இந்த அறநெறியாகவே முடியும்.

அறநெறி அனைவர்க்கும் பொது 'உலகத்தைக் கடந்த கடவுட் பொருள் ஒன்று உண்டு என்று பொதுவாக உணர்ந்து, எவ்வகையிலேனும் கடவுள் வழிபாட்டினை மேற்கொண்டு, 'பிறிதோருயிர்க்குத் தீங்கு நினையாது இயன்ற அளவு பிறவுயிர்க்கு நன்மை செய்து வாழ்தல் வேண்டும் என்பதே கடவுளது ஆணை' எனவும், 'இதற்கு மாறாக ஒழுகுதல் அவனது ஆணையை மீறியதாகும்' எனவும் அறிந்து அதன்படி ஒழுகுதலே அறமாதலின் அஃது எல்லார்க்கும் பொது நெறியாகின்றது. இதுவே வேதநெறி. கடவுட் கொள்கை வேண்டுவதில்லை: மக்கள் பிறருக்குத் தீங்கு செய்யாமல் இருந்தால் போதும்' எனச் சிலர் சொல்வது உண்மை அறநெறியாகாது. அதனால், அந்நெறியை உயர்ந்தோர் ஏற்றுக்கொள்வதில்லை. ஆகவே, வேதநெறிக்கு மாறானவைகளை, 'புறநெறி' என ஒதுக்கினர் ஆன்றோர்.

இனி, இவ்வாறு நன்னெறியைப் பொதுவாகமட்டும் பற்ருது, பொருளியல்புகளை நன்கு ஆராய்ந்து, 'கடவுளின் இயல்பு இன்னது; உயிர்களின் இயல்பு இன்னது; அவ்வுயிர்களின் துன்பத்திற்குக் காரணம் இது; அத்துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தை அடையும் வழி இது; நிலைத்த இன்பம் இது நிலையாத இன்பம் இது' எனச் சிறப்பாக உணர்ந்து, அவ்வுணர்விஞல், 'தனக்குவமை இல்லாதான் தாள் சேர்தல் ஒன்றே மனக்கவலை மாற்றுதற்கு வழியன்றிப் பிறிதொரு வழி இல்லை' எனத் தெரிந்து, அவனது அருள்வழியே ஒழுகுதல் அருள்நெறியாகும். இஃது அறநெறியில் நின்று, பழுத்த உள்ளமுடையராகிய ஒரு சிலர்க்கே வாய்ப்பது ஆதலின், இது சிறப்பு நெறியாம். இந்நெறியே 'சிவ்யாகமங்கள்' எனப்படும் சிவாகமங்களிற் சொல்லப்பட்டது. சிவாகமங்களைக் கொள்ளாது சிலர் பிற பிற சிறப்பு நூல்களைக் கொண்டு வேறு வேறு வகையான அருள் நெறிகளைக் கூறுவனவெல்லாம், காய்தல் உவத்தல் இன்றி நடுநின்று ஆராயின், அவை உண்மை அருள்நெறியன்ருக, சிவாகம நெறியே உண்மை அருள்நெறியாய் விளங்கி நிற்கும் ஆதலின, சிவாகம நெறி ஒன்றே, 'சித்தாந்தம்' எனவும், ஏனைய நெறிகளெல்லாம், 'பூர்வபட்சம்' எனவும் அறிந்தோர் கூறினர். "பிறநூல் திகழ்பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" என்பது அருள்நந்தி சிவாசாரியர் வாக்கு. 'சித்தாந்தமே சித்தாந்தம்; அவற்றிற்கு வேருனவை பூர்வபட்சங்கள்' என, 'இரத்தினத் திரயம்' என்னும் வடநூலிலும் கூறப்பட்டது. இதில், 'சித்தாந்தம்' என்றது, சிவாகமங்களின் ஞான பாதத்தை. 'சிவாகம நெறியே உண்மை அருள்நெறி' என்பதை.

"வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறை விளங்க"

என்றதில், சேக்கிழார், "மிகுசைவத்துறை" என்றதஞல் விளக்கிஞர் எனவே, உண்மை உய்யும் நெறி சிவாகம நெறியாகிய சைவ சமயமே என்பதும், அந்நெறிப்படியே முதற்கண் சமய திட்சை. விசேட திட்சைகளைப் பெற்றுச் சரியை கிரியா யோகங்களைச் செய்து, அவற்றின் வழியே இருவினை ஒப்பு மல பரிபாகம், சத்திநிபாதம் வாய்க்கப்பெற்றுப் பின் நிருவாண திட்சையாற் பெறும் சிவஞானம் ஒன்றே பிறவிக் கடலைக் கடப்பித்து. இறைவன் திருவடியாகிய முத்திக்கரையில் சேர்க்க வல்லது என்பதும் இனிது விளங்கும்.

கருணைமூர்த்தியாகிய சிவபெருமான், உண்மை உய்யும் நெறியாகிய சிவஞானத்தை உயிர்களுக்கு உணர்த்துதற் பொருட்டுத் திருக்கயிலாயத்தில் சீகண்டபரமசிவனாய் எழுந் தருளியிருந்து சிவாகமங்களை உமையம்மை, கணபதி, கந்தன், நந்திபெருமான் என்பவர்க்கு அருளிச்செய்ய, அவர்கள் வழியே ஞானபரம்பரைகள் சில நிலவுலகில் தோன்றலாயின. அவை களே 'திருக்கயிலாய பரம்பரை' எனப்படும் பரம்பரைச் சைவ ஆதீனங்கள். இவைகளில் இன்றும் நன்கு நின்று நிலவு வது நந்தி பரம்பரை ஒன்றே. நந்தி பரம்பரையை, 'சயிலாதி மரபு' என்பர். சிலாத முனிவருடைய புதல்வராதல்பற்றி, நந்தி தேவர், 'சயிலாதி' எனப்படுகின்றார்.

'சீகண்ட பரமசிவனிடத்தில் உபதேசம் பெற்ற நந்தி பெருமானிடத்தில் எண்மர் உபதேசம் பெற்றனர்' என்றும், 'அவ்வெண்மருள் தாம் ஒருவர்' என்றும் திருமூலர் அருளிச் செய்யும் திருமந்திரம் இது ;

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர், சிவயோக மாமுனி,
மன்று தொழுத பதஞ்சலி, வியாக்ரமர்
என்றிவர் என்னோடு எண்மரு மாமே.

இவ்வெண்மர்களில் திருமூலர், தமக்கு மாணாக்கராய் அமைந்தவர் ஏழுபேர் எனப் பின்வரும் திருமந்திரத்தால் குறிப்பிடுகின்றார் ;

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன்,
கந்துருக், காலாங்கி, கஞ்ச மலையனோடு
இந்த எழுவரும் என்வழி யாமே

இதனால், திருமூலர் பரம்பரை ஏழு கிளைகளாய்ப் பரவி யிருந்தமை தெளிவாகும். எனினும், அவற்றுள் ஒன்றேனும் இப்பொழுது காணப்படவில்லை. திருச்சிராப்பள்ளி மௌன மடம் இத்திருமூலர் பரம்பரையே, என்பது தாயுமானவர் தமக்கு ஞானோபதேசம் செய்த இம்மௌன குருவை, 'மூலன் மரபில்வரு மௌனகுருவே' என்று போற்றியிருப்பதால் தெளிவுற விளங்குகின்றது.

திருமூலர் சொல்லிய, நந்தியருள்பெற்ற நந்திகள் நால்வரா வர், 'சனகர், சனந்தனர், சனுதனர், சனற்குமாரர்' என்னும் நால்வரே என்பது மரபு. இனி, சிவஞான சித்தியார் பரபக்கப் பாயிரத்துள், 'கதிப்பாற் செல்ல - ஏதுநெறி எனும் அவர்கட்கு அறிய முன்னுள், இறைவன் அருள்நந்தி தனக்கு இயம்ப நந்தி - கோதில்அருட் சனற்குமாரற்குக் கூற' என அருணந்தி சிவாசாரியார் கூறியிருத்தலால், நந்தி அருள்பெற்ற நாதருள் சனற்குமார முனிவர் ஒருவர் என்பது தெளிவு.

இனிச் சிவப்பிரகாசப் பாயிரத்துள் உமாபதி சிவாசாரியார், குரு பரமபரையைக் கூறுமிடத்தில்,

> "தேவர்பிரான் வளர்கயிலை காவல் பூண்ட
> திருநந்தி, அவர்கணத்து ஓர்செல்வர், பாரில்
> பாவிய சத்தியஞான தரிசனிகள், அடிசேர்
> பரஞ்சோதி மாமுனிகள்"

எனக் கூறுதலால், சனற்குமார முனிவர் மாணுக்கர் சத்திய ஞான தரிசனிகள் எனவும், சத்தியஞான தரிசனிகள் மாணுக்கர் பரஞ்சோதி மாமுனிகள் எனவும் நன்கு உணரலாகும்.

"அறிவினுல் மிக்க அறுவகைச் சமயத்து அவ்வவர்க் கங்கே ஆரருள் புரிந்து" என்ற சுந்தரர் திருவாக்கின்படி அனைத்துச் சமயங்கட்கும் முதல்வனுகிய சிவபெருமானே சைவ சமயத்தின் முதலாசிரியன் என்பதும், அப்பெருமான் திருக் கயிலாயத்தில் எழுந்தருளியிருந்து ஞானத்தை உபதேசித்தருள, அந்த உபதேச பரம்பரையிலே ஞானம் விளங்கி வருகின்றது என்பதும் மேற்கூறியவற்றுல் விளங்கும்

நந்தி மரபினைக் குறிப்பிடும்பொழுது, 'அகச்சந்தானம், புறச்சந்தானம்' என்று இருவகையாகச் சொல்லப்படும். ஸ்ரீகண்ட பரமசிவன் கல்லாலமர நிழலில் தென்முகக் கடவுளாய் இருந்து உபதேசம் செய்ய அதனை நேரே பெற்ற நந்திதேவர், அவர் மாணுக்கர் சனற்குமார முனிவர், அவர் மாணுக்கர் சத்தியஞான தரிசனிகள், அவர்மாணுக்கர் பரஞ்சோதி மாமுனி கள் ஆகிய நால்வரும் அகச்சந்தானுசாரியர்கள். இவர்கள் எப்பொழுதும் திருக்கயிலையில் இருப்பதால் 'அகச்சந்தானுசாரி யர்' எனப்படுகின்றனர்.

அகச்சந்தானுசாரியர் நால்வருள் நான்காமவராகிய பரஞ்சோதி மாமுனிகள் அகத்திய முனிவரைக் காணவேண்டித் தென்றிசை நோக்கி வானவழிச் சென்றபொழுது திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியிருந்த, 'சுவேதவனப்பெருமாள்' என்னும் பிள்ளைத்திருநாமம் உடைய மெய்கண்ட தேவரது பக்குவ நிலையை அறிந்து ஆங்கு இறங்கி அவருக்குத் தம் பரம்பரை உபதேசத்தைச் செய்து சென்றமையால், மெய்கண்ட தேவர் முதற்புறச் சந்தானுசாரியரானார். அவர் மாணாக்கர் துறையூரில் தோன்றி வாழ்ந்து, 'சகலாகம பண்டிதர்' எனப் பலராலும் போற்றப்பட்ட அருணந்திசிவாசாரியார். அவர் மாணாக்கர் திருப்பெண்ணாகடத்தில் தோன்றி மருதூரில் வாழ்ந்த மறைஞானசம்பந்த சிவாசாரியார். அவர் மாணாக்கர் தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவராய்ப் பின்பு கொற்றவன்குடியில் வாழ்ந்த உமாபதிசிவாசாரியார். எனவே, மெய்கண்டார் முதலாக உள்ள இந்நால்வரே புறச்சந்தானுசாரியர்கள். இது, மேற்காட்டிய சிவப்பிரகாசச் செய்யுளில்,

" வெண்ணை - மேவியசீர் மெய்கண்ட திறலார் மாரு
விரவுபுகழ் அருணந்தி விறலார், செல்வத்
தாவில் அருள் மறைஞான சம்பந்தர் இவர் இச்
சந்தானத்து எமையாளும் தன்மையோரே "

என உமாபதிசிவாசாரியர் அருளிச்செய்திருத்தலால் அறியப்படுகின்றது. இவ்வகச்சந்தான புறச்சந்தானுசாரியர்களை முறையாகக் கூறும் அச் சிவப்பிரகாசச் செய்யுளை முழுதாக மற்றொருமுறை காண்போம்:

தேவர்பிரான் வளர்கயிலை காவல் பூண்ட
திருநந்தி, அவாகணத்து ஓர்செல்வர், பாரில்
பாவிய சத்திய ஞான தரிசனிகள், அடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியா வெண்ணை
மேவியசீர் மெய்கண்ட திறலார், மாரு
விரவுபுகழ் அருணந்தி விறலார் செல்வத்
தாவில்அருள் மறைஞான சம்பந்தர் இவர் இச்
சந்தானத்து எமைஆளும் தன்மையோரே "

இச் செய்யுளின் இறுதியில், "எமை ஆளும், தன்மையோர்" என்றதனால், மறைஞானசம்பந்தருக்கு அடுத்த ஆசிரியர், இதனை அருளிச்செய்த உமாபதி சிவாசாரியர் என்பது விளங்குகின்றது.

மறைஞானசம்பந்தர் மாணுக்கராகிய உமாபதி சிவாசாரியரோடு உடன் இருந்த மற்றொரு மாணுக்கர் 'மச்சுச் செட்டியார்' என்பவர். இவரது வழியிலே வந்த **கமலைஞானப்பிரகாச தேசிகருக்கு** மாணுக்கராய் விளங்கிய ஸ்ரீ குருஞானசம்பந்தரே தருமபுர ஆதீனத்தை நிறுவித் தமது ஞான பரம்பரையை வழி வழி விளங்கச்செய்தார். உமாபதி சிவாசாரியர் வழியில் வந்த ஸ்ரீ நமசிவாயகுருமூர்த்திகளே திருவாவடுதுறை ஆதீனத்தை நிறுவித் தமது ஞான பரம்பரையை வழிவழி விளங்கச் செய்தார். அதனால் இவ்விரண்டு ஆதீனங்களும் திருக்கயிலாய பரம்பரைகளாய் விளங்குகின்றன. கந்த பரம்பரையில் உண்டாகியது சூரியனார்கோயில் ஆதீனம். இத்திருக்கயிலாய பரம்பரைகளே சிவஞானத்தை வழிவழியாக நிலவுலகில் விளங்கச்செய்து வருகின்றன. இவற்றின் வழியே சிவஞானத்தைப் பெற்று உய்தல் மக்களுக்குக் கடமையாகும்.

விசேஷ நாட்கள்

10—7—67 முதல் 10—8—67 முடிய

12—8—67	சுந்தரமூர்த்தி நாயனர்
,,	சேரமான்பெருமாள் நாயனர்
15—8—67	சுதந்தர நாள்
,,	கலிய நாயனர்
,,	கோட்புலி நாயனர்
17—8—67	பிரதோஷம்
27—8—67	கார்த்திகை
1—9—67	செருத்துணை நாயனர்
2—9—67	பிரதோஷம்
,,	அதிபத்த நாயனர்
,,	புகழ்த்துணை நாயனர்
3—9—67	இளையான்குடி மாற நாயனர்
5—9—67	மறைஞானசம்பந்தர்
10—9—67	குலச்சிறை நாயனர்

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 26, இதழ் 8, பக்கம் 428 இன் தொடர்ச்சி)

தத்துவங்களின் தோற்றம்

மாணுக்கன் : மும்மாயைகளைப் பற்றி அடியேன் ஒருவாறு அறிந்தேன். 'மாயையினின்றும் தத்துவங்களே முதலில் தோன்றும்' என்றும், பின்னர் அத் தத்துவங்களினின்றே உலகம் தோன்றும்' என்றும் அருளினீர்கள்; 'இந்த இந்த மாயையிலிருந்து இன்ன இன்ன தத்துவங்கள் தோன்றும்' என்பதையும் அருளிச்செய்தல் வேண்டும்

காரியப்பாட்டின் வகை

ஆசிரியர் : நல்லது; அவற்றைக் கூறுவோம். 'மாயை காரணம்; தத்துவங்கள் அதனின்றும் தோன்றும் காரியங்கள்' என்பதை இப்பொழுது நீ நன்கு அறிந்துள்ளாய். எனினும், காரணங்களினின்றும் காரியங்கள் தோன்றும் முறை இவை என்பதை முதலில் அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

மாணுக்கன் : அங்ஙனமாயின் காரணங்கள் காரியப்படும் முறையைச் சொல்லியருள்க.

ஆசிரியர் : படை வீரர்கள் வேற்று நாட்டின்மேல் செல்லும் பொழுது அங்குப் பாடிவீடு (கூடாரம்) அமைத்துக் கொள்கின்றார்கள். அதை எவ்வாறு அமைக்கின்றார்கள்? மிகப் பெரிய துணியால் அமைக்கின்றார்கள். எனவே, பாடிவீட்டிற்குத் துணி காரணமாகின்றது. துணியாகிய காரணம், எப்படி வீடாய்க் காரியப்பட்டது? முன்பு யானையின்மேலும். ஒட்டகத்தின் மேலும் ஏற்றப்பட்டு மூட்டையாய் ஒடுங்கிக் கிடந்த துணிகள், பின்பு, விரிந்து பெரிய மாளிகைகளாய்க் காட்சியளிக்கின்றன. இவ்வாறு சுருங்கியிருந்த காரணப்பொருள் பின் விரிந்து நின்று காரியமாதற்கு, 'விருத்தி' என்பது பெயர். இதற்கு, 'படம்

குடிலானுற்போல' என உதாரணம் கூறுவர். படம் - துணி. குடில் - குடிசை.

இனி, மண் குடமாவதும், பொன் பணியாவதும், பால் தயிராவதும், நெல் பொரியாவதும் மரங்கள் ஆசனமாவதும் போல உருமாறுதல், 'பரிணமம்' எனப்படும். இவ்வாறன்றி நூல் ஆடையாவதும், மலர் மாலையாவதும் போல்வன 'ஆரம்பம்' எனப்படும். ஏனெனில், நூல்களையோ மலர்களையோ ஒருவழியாகக் குவித்தால் ஆடையும், மாலையும் ஆகிவிடமாட்டா. ஒவ்வொன்ருக எடுத்து ஒன்றன்பின் ஒன்ருக முறையே வைத்து இணைத்தாலே ஆடையும், மாலையுமாகும். ஆகவே, 'ஒன்று இரண்டு, மூன்று' என்று இவ்வாறு தொடங்கி முறையே தொடர்ந்து காரியப்படுதலால், இது, 'ஆரம்பம்' எனப்படுகின்றது.

இனி, நெல் பொலியாவதும், எள் குவியலாவதும் போல்வன, 'சமுதாயம்' எனப்படும். சமுதாயம் - கூட்டம். இவை முன் சொல்லியவைபோல 'ஒன்று, இரண்டு, மூன்று' என்று ஒன்றன்பின் ஒன்று முறையாகத் தொடராமல், பல ஒருங்கு திரண்டு காரியமாகின்றன. அதனுல், இக் காரியப்பாடு 'ஆரம்பம்' அன்று.

இனி, இப்பி வெள்ளியாவதும், கயிறு பாம்பாவதும் போல்வன உண்மையில் காரணம் காரியமாக மாறுவன அல்ல; காண்பவனுக்கு உள்ள மயக்கம் காரணமாக அவை வெறும் தோற்ற மாத்திரத்தில் அவ்வாறு காட்சியளிக்கின்றன; அதனுல், இவை போல்வன, 'விவர்த்தனம்' எனப்படும். விவர்த்தனம் - வேற்று நிகழ்ச்சி.

இவற்றுள், 'உலகம் பரமாணுக்களால் ஆயதே' எனக் கூறும் தார்க்கிகரும், சமணரும் உலகத்தின் காரியப்பாட்டை, 'ஆரம்பம்' என்பர். பௌத்தர், 'பஞ்ச கந்தமும் கூடிய சமுதாயம்' என்பர். மாயாவாதிகள், 'பரப்பிரமத்தின் வெறும் தோற்றமாத்திரமாகிய விவர்த்தனம்' என்பர். சாங்கியர், 'பரிணமம்' என்பர், ஏனைய வேதமதத்தவர் பலரும் தார்க்கிகர் மதத்தையே உடன்பட்டுக் கொள்வர். சைவ சித்தாந்தம்; 'சுத்த மாயையின் காரியம் விருத்தி' என்றும், அசுத்த மாயையின் காரியம் பரிணமம்' என்றும் கூறும். பரிணமத்திலும் பூரண பரிணமம் கூருது, ஏகதேச பரிணமமே கூறும். பால் தயிராதல் பூரண பரிணமம். அஃதாவது ஒருகுடம் பாலில் சிறிது மோர் சேருமாயின், குடத்தில் உள்ள பால் முழுவதும் தயிராகிவிடும்.

அதனுல் அது பூரண பரிணுமம். அவ்வாறன்றி, வெண்ணெய்த் திரளும், சாணமும் சிலநாள் இருந்தால் காற்று, வெப்பம் என்ற இவற்ருல் புழுவாக மாறுகின்றன. ஆயினும் அவை சிறிது சிறிதாக அவ்வாருவதன்றி முழுதும் ஒருங்கே அவ்வாறு மாறுவது இல்லை. அதனுல், அவை 'ஏகதேச பரிணுமம்' எனப் படும். சைவசித்தாந்தம் அசுத்த மாயைக்குக் கூறும் பரிணும மும், இவ்வாறு ஏகதேச பரிணுமமேயன்றிப் பூரண பரிணுமம் அன்று.

சுத்தமாயா காரியம்

நால்வகை வாக்குக்கள்

சுத்தம், அசுத்தம், பிரகிருதி என்னும் மும்மாயைகளில் மிகவும் நுண்ணிதாய் மேலே உள்ள சுத்த மாயையினின்றும் 'சூக்குமை, பைசந்தீ, மத்திமை, வைகரி' என்னும் நால்வகை வாக் குக்கள் தோன்றும். 'வாக்கு' எனினும், 'சொல்' எனினும் பொருந்தும்.

'சொல் உலகம், பொருள் உலகம்' என உலகம் இருவகையாகச் சொல்லப்படும். சொல் உலகத்தை, 'சத்தப் பிரபஞ்சம்' எனவும், பொருள் உலகத்தை, 'அர்த்தப் பிரபஞ்சம்' எனவும் கூறுவர். 'சொல்' என்பது, இங்கு நாம் காதினுல் கேட்கின்ற ஓசையை யன்று; அவ்வோசையின் வழியே எழுந்து நமக்குப் பொருள் உணர்வை உண்டாக்குகின்ற ஆற்றலையேயாம் என்க. சொற் கள் பொருளைப் பற்றுக்கோடாகக் கொண்டே நிகழுமாகலின், நால்வகை வாக்குக்களும் 'தத்துவம்' எனப்படா; 'தாத்துவிகங் கள்' என்றே சொல்லப்படும். சுத்த மாயையில் தோன்றுவன அனைத்தும் விருத்தியே யன்றிப் பரிணுமம் அல்ல. சொல்லுல கம் அனைத்தும் சுத்த மாயையினின்றும் தோன்றுமன்றி அசுத்த மாயையினின்றும் தோன்றுதல் இல்லை.

மாணுக்கன் : பொருளை உணர்த்துவன, வாயாற் சொல்லப் படும் சொற்களேயன்ருே ? அவ்வாறன்றி, 'சொற்கள், பொரு ளுணர்த்தும் ஆற்றலை எழுப்பும்; அவ்வாற்றலே பின்பொருளை உணர்த்தும்' எனக் கூறின், 'சொற்களுக்கு வேருய்ப் பொருள் உணர்த்தும் ஆற்றல் ஒன்று உண்டு' என்பதற்குச் சான்று என்னை ?

ஆசிரியர் : வாயாற் சொல்லப்படும் சொற்களே பொருளை நேரே உணர்த்துமாயின், அவை கெடும்பொழுது அவற்றின்

பொருள் உணர்வும் உடன் கெடுதல் வேண்டும். அவ்வாறன்றி முன்னர்க் கேட்ட சொற்களின் பொருள் உணர்வு, பின்னர்க் கேட்கும் சொற்களின் பொருள் உணர்வோடு தொடர்புபட்டு நிற்றல் அனுபவமாதலின், பொருள் உணர்த்தும் ஆற்றல் அச் சொற்களுக்கு வேறாய் உண்டு என்பது பெறப்படும். இன்னும் ஓரெழுத்தொரு மொழியும், ஈரெழுத்தொருமொழியும் அன்றிப் பல எழுத்துக்களால் ஆய சொற்களில் முன்னர்த் தோன்றிய எழுத்துக்கள் விரையக் கெடுதலின், அவ்வெழுத்துக்கள் அனைத் தும் ஒருங்குகூடி ஒரு சொல்லாய் நின்று அச்சொற்பொருளை உணர்த்துமாறில்லை. ஆகவே, ஒவ்வோர் எழுத்தினாலும் தோற்றுவிக்கப்பட்ட ஆற்றல்கள் அனைத்தும் ஒருங்கியைந்து நின்றே அச்சொல்லான் உணர்தற்குரிய பொருளை உணர்த்தும் என்பது புலனாகும். இவ்வாற்றால், சொற்கள் நேரே பொருளை உணர்த்தாது, பொருள் உணர்த்தும் ஆற்றலை எழுப்ப, அதுவே, பொருளையும் உணர்த்தும் எனத் தெளிவாயாக.

மாணாக்கன் : எழுத்துக்களும், அவற்றானாய சொற்களும் நீட்டித்து நில்லாது விரையக் கெடுமாயினும், அவற்றைக்கேட்ட கேள்வி வாசனை மனத்தின்கண் நிற்குமாதலின், அதனோடு பின்னர்த்தோன்றும் எழுத்துக்களின் கேள்வியும், சொற்களின் கேள்வியும் தொடர்ந்து நின்று பொருளை உணர்த்துமாதலின், அதனையொழித்து வேறோர் ஆற்றல் உண்டு எனக்கொள்ள வேண்டுதல் என்னையோ ?

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய் ! நீ சொல்லுகிறபடியே வைத்துக்கொண்டாலும், 'எழுத்துக்களோ அல்லது சொற் களோ பொருளை நேரே உணர்த்தும்' என நீ முற்கூறிய வாதம் விட்டுப்போக, 'சொற்களுக்கு வேறாய் உள்ள மற் றொன்றே பொருளை உணர்த்தும்' என்பதே முடிவாகுமன்றோ ?

மாணாக்கன் : ஆம் ! சொற்களே பொருளை நேரே உணர்த்த மாட்டா என்பதை அடியேன் இப்பொழுது உணர்கின்றேன்; ஆயினும், 'சொற்கேள்வியின் வாசனைக்கு' வேறாக மற்றோர் ஆற்றல் உண்டு என்பதை உணரமாட்டாதவனாகின்றேன்.

ஆசிரியர் : கேட்கப்பட்ட சொற்களின் வாசனை, கேட்கப் பட்ட அச்சொற்களையே நினைவூட்டுமன்றிப் பொருளை நினை வூட்டும் என்றல் பொருந்தாது. அதனால், எழுத்துக்கள் அல்லது சொற்களின் வாசனை பொருளை உணர்த்தும் என்னாது அச்சொற்களால் புலப்பட்டு நின்ற வேறோர் ஆற்றலே

பொருளை உணர்த்தும் என்பது உணர்ந்துகொள்வாயாக. இதனானே. 'எழுத்து' எனப்படுவதும். 'சொல்' எனப்படுவதும் உண்மையில் இங்குக் குறிக்கப்பட்ட ஆற்றலே ஆயினும், அதனை உலகினர் அறியமாட்டாமையின், அவ்வாற்றலைப் புலப்படுக்கும் ஓசைகளையும், 'எழுத்து' என்றும், 'சொல்' என்றும் குறிப்பர் ஆசிரியன்மார். ஓசை வடிவாய் நிற்கும் எழுத்தானும், சொல்லானும் புலப்படுதல்பற்றி அவற்றால் எழுப்பப்படும் ஆற்றலையும், 'ஓசை' என வைத்து, 'எழுத்தோசை' எனக் கூறுவர். எழுத்தோசையைப் புலப்படுத்துவன இசையோசைகள் என்க. 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்ற அப்பர் திருவாக்கில், 'ஒலி' என்றது எழுத்தோசையைக் குறித்தல் காண்க.

எழுத்தோசையாகிய வாக்கு, இசையோசையாகிய (எழுத்துக்கள் அழியினும் அழியாது நுண்ணிதாய்) நிற்றல் பற்றி இதனையே 'பிரமப்பொருள்' எனச் சத்தப் பிரமவாதிகள் கூறுவர். சுத்த மாயையின் தன்மையை அறியாமையால் அவர் அவ்வாறு கூறினும், வாக்கும் சடமன்றிச் சித்தன்மையின் அவர் கூற்றுச் சிறிதும் பொருந்தாமை அறிந்துகொள்க. எழுத்துக்களை 'அக்கரம்' என்றலும், 'அவை அழிவில' என்னும் கருத்தினாலேயாதலின், அஃது உபசாரமேயாம். ஆசிரியர் தொல்காப்பியனாரும் வாயாற் சொல்லப்படும் எழுத்துக்களை 'எழுத்து' என்னாது, எழுத்தின் வடிவு எனவே கூறுதலாலும், பிறவாற்றாலும், உண்மை எழுத்தும், சொல்லும் இங்கு நாம் கூறிய ஆற்றலே என்பது அவரது கருத்தாதல் தெளிவு. தொல்காப்பிய உரையாளரும், 'எழுத்தின் உண்மைத் தன்மை நம்மனோர்க்கு உணர்த்தல் அரிதாகலின், ஆசிரியர் கூறிற்றிலர்' என்பர்.

மாணாக்கன் : 'எழுத்து, சொல்' என்பவற்றின் உண்மையை ஒருவாறு உணர்ந்தேன். இனி நால்வகை வாக்குக்களின் இயல்புகளையும் விளக்கியருளுதல் வேண்டும்.

(தொடரும்)

தயா மூல தன்ம வழி

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.

ஆட்சி :

அப்பரடிகள் பாடியருளிய இரண்டு திருத்தாண்டகங்களில் 'தயாமூல தன்மம்' என்ற தொடர் வருகின்றது. அவ்விரண்டு இடங்களும் பின்வருவன ;

" தயாமூல தன்மம் என்னும் தத்துவத்தின் வழிநின்று
தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை "[1]

" தயாமூலதன்ம வழி எனக்கு நல்கி.
மனம் திருத்தும் மழபாடி வயிரத் தூணே "[2]

இவ்விடங்களில், இத்தொடர்களை ஆழ்ந்து சிந்திக்குங்கால் மற்றொரு நுட்பம் புலனாகும். தயாமூலதன்மம் என்பது ஒரு 'தத்துவம்' என்றும், ஒரு 'வழி' என்றும் அடிகள் குறிக்கின்றார். சைவசமயத்தை - சைவசமயத் தத்துவத்தையே அடிகள் இவ்வாறு குறித்தனரா? அல்லது தாம் சார்ந்திருந்த சமண சமயத்தை விளக்கினரா? என்பது ஒரு சீரிய சிந்தனை.

விளக்கம் :

சமண சமயத்தை இத்தொடரால் அடிகள் குறித்திருத்தல் கூடாதென்பது, வெளிப்படை. ஏன்? நள்ளாற்றில் வீற்றிருக்கும் சிவபிரான், இத்தத்துவத்தின் வழிநின்று தம்மை வந்து வழிபடுவோர்க்கெல்லாம் நலம் கொடுக்கின்றார் என்பதனாலும், தமக்கு இவ்வழியை அறிவுறுத்தி மனம் திருத்தியவர் என்று மழபாடியில் இறைவனைப் போற்றுகின்றார் என்பதனாலும்,

---

[1] திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப்பதிகங்கள்- சைவசித்தாந்த மகாசமாசம் - 3-ம் பதிப்பு - 6—20—6.

[2] Ibid. 6—40—6.

இத்தொடர் சமணசமய நெறியாகிய புறநெறியைக் குறித்திருத்தல் இயலாது. ஆயின் சைவநெறியே இங்ஙனம் அடிகளாற் குறிக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

சிவநெறியை இத்தொடராலோ, அன்றி இப்பொருளமைப்புடைய வேறு தொடர்களாலோ அப்பர் அடிகட்கு முன்னே பின்னே குறித்துள்ளார்களா என்று சிந்தித்தால், அதுவும் இல்லையென்றே முடிவு செய்யத்தக்கதாக உள்ளது. எனவே, இத்தொடர் அடிகள் தாமே புதுவதாகப் புனைந்த அழகிய தொடர் என்பது விளங்கும்.

தொடர் விளக்க மாண்பு :

மூன்று வடசொற்கள் கூடிய கூட்டமாக இத்தொடர் உள்ளது. தயா, மூலம், தன்மம் என்பன அவை. அன்பு. முதற்காரணம், அறம் என்ற பொருள்களை இச்சொற்கள் முறையே பெறுகின்றன. அடிகள் கையாளும் வடசொற்கள் மிகக்குறைந்த அளவே; பெரிதும் தூய தமிழ்ச் சொற்களாகவே அடிகள் திருப்பாடல்களில் பயிலும். இவ்வாறு வரும் வடசொற்கள் அருகியே தோன்றும். சிவநெறிக் கொள்கையைச் சார்வதற்கு முன்பு, 'நம்பர் அருளாமையினால்' அமண் சமயம், குறுகினார் அடிகள்.[1] அச்சமயத்தார் வடமொழிச் சார்பு பெரிதும் உடையவர்கள். அடிகள் திருவாக்கில் இவ்வளவு குறைந்த நிலையில் வடசொற்கள் காணப் பெறுவதற்கும், இச் சமயச் சேர்க்கையே காரணம் என்று கூறுதலில் தவறில்லை. சிவநெறி அன்பும், அறமும் ஆகிய இரண்டும் கூடிய திருநெறி என்பது அடிகள் கொள்கை. 'அறம் வெல்லும்; பாவம் தோற்கும்'[2] என்ற பொதுநெறிப்படி உலகச் சமயங்களில் நின்று நிலைக்கும் நன்னெறியாக இத்தொன்னெறி விளங்குகிறது.

ஒன்றும் தன்மை :

சமண் சமயம் அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்த அக்காலத்தில் அந்த அரசின் ஆணைகளை அப்பரடிகள் அன்பினால் வென்றார்; நீற்றறையில் இட்டபோதும் நெஞ்சத்துள் 'ஈசன் எந்தை இணையடி நீழலையே'[3] இருத்திக்கொண்டு அந்த

---

[1] திருநாவுக்கரசு நாயனார் புராணம் — பா. 37. நாவலர் பதிப்பு.

[2] கம்பராமாயணம்.

[3] அப்பர் தேவாரம் 5-90—1.

அன்பின் பிழம்பாக இருந்த அடிகள் அந்நிலையிலும் பொலிந்து தோன்றினர். ஆனை அடர்த்திட வந்தபோதும் அடிகளின் அன்புப்பார்வையும், அவ்வன்பினில் விளைந்த அமுத மொழி களும் ஆனையையும் பணிவித்தன. நஞ்சு கலந்த பாற்சோறும் அன்பின் திருவுருவாய் நின்ற அடிகளுடைய உயிர்க்கு ஊறு செய்ய இயலவில்லை. கடலோ 'கல் மிதக்கத் துணை நின்று, அடிகளின் அன்பு வெற்றிக்கு அரண் ஆயிற்று. எனவே எல்லாம், எங்கும் எதனுள்ளும், எப்போதும் சிவமே யாகக் காணும் அன்பின் முதிர்ச்சியே இங்கு அழியாது நிற்கக் காண்கின்றோம். இந்நிகழ்ச்சிகளெல்லாம் கடந்த பின்னர், அடிகள் பாடிய பாடல்களே இங்கு நாமெடுத்துக்காட்டிய பாடல்கள். 'தாம் வேறு; பரம்பொருள் வேறு' என்ற நிலையில் நின்று பாடுவன இவை. உயிர்க்குலத்தின் சிறுமை யும், பரம்பொருளின் அளவிலாற்றலும் அடிகள் திருவுளத்தே தோன்றுகின்றன. ஆதலின் அடிகள் பாடல்களில் அந்தப் போக்கும் காணப்படும். தாமும் இறையுமாய்க் கலந்த அற்புதக் கூட்டுநிலையில் பாடப்படும் கவிதைகளும் அங்கு உண்டு.

'என்னாக்கித் தன்னானான்'
'என்னான்'

என்றெல்லாம் வரும் இடங்களை இப்படிப் பொருள் செய்தல் வேண்டும்.

'அன்பே சிவம்' என்பது உண்மைநெறி. அன்பின் வேறு நிலையாகிய அருளும் அப்பரம்பொருளே என்பதும், அன்பு அருள் என்ற இரண்டையுமே அடிநிலையாகக் கொண்ட அறம் என்பதும் அதனின் வேறன்று என்பதும் இவ்விடத்துக் கூர்ந்து நோக்கியுணரத் தக்கவை.

மெய்ஞ்ஞானியர் இயல் :

எழுதல், மாசு களைதல், ஒளிவிளக்கம், ஒன்றுதல் என்ற நான்கினையும் ஞானிகளின் நிலைகளாகக் கூறுவர் மெய்யறிஞர்[2].

அப்பர் தேவாரம் 6—79—8.

[2] As a spritual technique mysticism has developed what is known as the mystic way having three (some times four) stages:- (1) awakening (2) Purgation (3) illumination (4) Unification."

— An Encyclopaedia of Religion — Ed. Vercilius Ferm — P. 513 « 514.

மக்கட் சமுதாயத்தை நோக்கித் தம் மெய்யுணர்வினை எடுத்துரைத்து விழிப்படையச் செய்தல் இத்தகு ஞானியர்களது முதற் கடமை யாகின்றது. விழிப்புறச் செய்ததன்பின், மனமாசு களைதல் இம்மாண்புடையோர் இயற்றும் மாண்புச் செயல் ஆகின்றது. இவர்கள் அடையும் ஒளிவிளக்கம் இவர்களது அமுத மொழிகளினின்றும் உலகு அடைந்து பயன் பெறத் தக்கதாகின்றது. இவ்வாறு உலகிடைத் தாம் மேற்கொண்டு இயற்றும் உயர் கடன்கள் முற்றுப்பெற்ற பின்னேயே, தாம் பரம்பொருளுடன் ஒன்றாக இணைந்து பேரின்பம் பெறுவது இவர்கள் இயல்பு என்று கூறலாம்.

ஞானநிலை :

உலகநோக்கில் நின்று கண்டால் இத்தகு ஞானநெறியில் பலநிலைகளைக் காணலாம். சிந்தனை ஒருமைநிலை அல்லது தியான நிலை, தன்னநுபவநிலை. இயற்கை இணைப்புநிலை எனப் பல நிலைகளைக் கூறலாம். இவர்கள் உலகிற்குத்தரும் அருளுரைகள் பெரும்பாலும் ஒரே குறிக்கோள் உடையவையாய் இருக்கக் காணலாம். தன்னுள்ளே பரம் பொருளைக் காண்டல், படைப்பு நுட்பங்களின் உள்பொருளை உணர்ந்தின்புறல், நிலையாத பொருள்களினும் நிலைத்த பொருளை உற்று நோக்கியறிதல், கடமை புரிவதிலும், மக்கட்பணி புரிவதிலும் பேரின்பம் அடைதல், எளிமையின் இன்பம் காணல், தூய அன்பிற்கு உயர்மதிப்புத் தருதல் முதலிய பலவே உலக ஞானியர்களின் ஒருமித்த கருத்தாதலை உணரலாம்.[1]

உலகப்பெருநெறி :

இவை யனைத்தும் அப்பரடிகள் திருவாக்கில் விளங்கக் காணலாம். அடிகள் உரைக்கும் 'தயாமூல தன்மநெறி' இவ்வாறு

---

[1] "The lessons taught us by the mystics may be summarised as (1) to look for reality within, (2) to find meaning in mystery, (3) to discover the eternal in the temporal, (4) to realize the value of solitude, (5) to find Joy in the service, (6) to discern honor in humility, and (7) to give supremacy to love."

— An Encyclopaedia of Religions - Ed. Vercilius Ferm — P. 514.

சிந்திக்குங்கால் உலகப் பெருநெறி ஆதல் ஊன்றியுணரத் தக்க தாகும். 'இறைவன் பேரன்பு வடிவமாக உள்ளவன்; அவன் எப்போதும் அருள்புரிய ஆயத்தமான பெருங் கருணையாளன்; நாம்தாம் அதனைப் பெறுதற்கு நம்மைத் தகுதி உடையவர் களாக ஆக்கிக் கொண்டோமில்லை; சுருங்கக் கூறினல் அவன் விருந்து படைக்கும் வெற்றியோன்; நாமே புதியவர்களாகவே இருந்து விடுகின்றோம்.'[1]

"நான் என்பாற் கொண்டிருக்கும் பேரன்பைவிட இறை வன் என்பாற் பேரன்பின் அணிமை கொண்டுள்ளான்"[2] என்றெல்லாம் வரும் மெய்ச்டர் எக்ஃகார்ட் (Meister Ekhart 1270-1327) அன்புமொழிகளோடு ஒத்த அப்பரடிகள் திருமொழி களும் இங்கு எடுத்துக் காட்டாகக் கூறத்தக்கவை.

கருணை வளம்:

சிவபிரான் தமக்கு அருளிய தத்துவத்தினை நன்கு ஆழ்ந்து உணர்கின்ற அப்பரடிகட்கு அது வெறும் அன்பாகமட்டும் காட்சி தரவில்லை; ஓர் அறமாகவும் தோன்றுகின்றது. புறச் சமயம் போந்து பிரானை மறந்து நின்ற தம்மை, ஒருபொருளாக எண்ணிப் பின்னரும் ஆண்ட பெருந்தகையின் பெருங் கருணையை எண்ணிப்பார்க்கும் அந்தத் திருவுள்ளம் அந்த அன்பிலே மூழ்குகின்றது; திளைக்கின்றது; துளையமாடுகின்றது; எண்ணற்ற இடங்களில் இக்கருணையை வியந்து போற்றி நைகின்றது.

சேக்கிழார் சிந்தனை:

சேக்கிழார்க்கும் இச்சிந்தனை எழுகின்றது. முதல் திருப் பதிகம் பாடியபின், சூலை தணிந்திடப்பெற்ற அடிகள், திருவருள் நிரம்பப்பெற்ற உணர்வினராய்த் தெளிவு' மருட்கை என்ற இரண்டு மெய்ப்பாடுகளிடையே தம்மையாண்ட பெருங் கருணைவெள்ளத்தில் மூழ்குகின்றார் என்று இசைக்கின்றார்:

---

[1] "God is always ready, but we are unready; he is at home, we are strangers"

[2] "God is nearer to me that I am myself"

— These are quoted by Rev. W R Inge in 'Mysticism in Religious" — P. 25.

"மன்னும் பதிகம் மது பாடியபின்
வயிறுற்றடு சூலை மறப்பிணிதான்
அந்நின்ற நிலைக்க ணகன்றிடலும்
அடியேனுயிரோ டருள் தந்ததெனச்
செந்நின்ற பரம்பொரு ளானவர்தந்
திருவாரருள் பெற்ற சிறப்புடையோர்
முன்னின்ற தெருட்சி மருட்சியினுன்
முதல்வன் கருணைக்கடல் மூழ்கினரே." [1]

"அத்தன்மைய னுய விராவணனுக்கு
அருளுங் கருணைத் திறமானவதன்
மெய்த்தன்மை அறிந்து துதிப்பதுவே
மேல்கொண்டு வணங்கினர் மெய்யுறவே." [2]

அன்பறநேறியே :

இறைவன் தம்மாட்டுச் செய்த பேரருளை நினைந்த அடிகட்கு இராவணனுக்கு அருள்புரிந்த பெருங்கருணையே நினைவில் வருகின்றது; வரலும் அதனை ஒவ்வொரு பதிகத்தும் பாடிக் கசிந்திடலானுர் என்கின்றது பெரியபுராணம். ஆதலின் தமக்கு இறைவன் அருளிய நெறிப்பாடு 'தயாநெறி' என்ற உணர்வு அடிகள் உள்ளத்தே முதற்பதிகம் பாடும்போதே 'உரைத் தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு'[3] வந்துற்றபோதே தோன்றி நின்றது என்று கூறலாம். அன்றியும் இறைவனது அருளாணையின் ஏற்றத்தையும் அதனுடன் இணைத்துக் காண் கின்ருர் அடிகள். இந்த விளக்கத்தின் அடியே விளைந்த அற்புதத் தொடரே, தயாமூலதன்மம் என்னும் தத்துவம், என்று கூறலாம். ஆதலின் அப்பரடிகளின் ஞானநெறியினை கிரியை நெறி என்று கூறுவதுடன், 'தயா மூல தன்ம நெறி' (அன்பறநெறி) என்று கூறுதலும் மிகப் பொருந்தும்; அஃது அடிகளே கூறிப்போந்ததாகலின், அத்திருவுள்ளத்திற்குப் பெரிதும் இசைந்ததாகவும் இருக்கும் என்பது ஒருதலை

1. 2 : திருநாவுக்கரசு நாயனுர் புராணம் - பா 71, 75.
3 : ,, பா 69

தமிழ்நாடு தெய்விகப் பேரவை

13—6—67 அன்று கோவையில்

சிங்காநல்லூர் வார வழிபாட்டுச் சங்கத்தாரால்

வாசித்தளிக்கப்பட்ட

வரவேற்பு மடல்

நல்லதொரு நாளிது, நலம்தரும் நாளிது
நாமெல்லாம் நன்மைக்குப் போராடும் நாளிது
மணம் வீசும் நாளிது, மனம் போற்றும் நாளிது
மனித இனமெல்லாம் மகிழ்வுறவே மலர்ந்திட்ட நாளிது

இறைபாடி நிறைதேட ஒன்ருகக் கூடிய
முறையோடு மனதாறப் பலநன்மை செய்துமே
வழிபாட்டு வளர்ச்சிக்குத் தளராது வாழ்ந்திடும்
எம்சங்கம் அளித்திடும் எழிலான மடல்இது.
தெய்வீக மணம்பொங்க தெருவெல்லாம் திருதங்க
மெய்ஞானச் சுடர்வீச அதில்பொய் புனை வாழ்வுவீழ
அடியார்கள் ஒன்ருக அவர் தம் அடிபணியும் நம்முன்னே
அருள்பொங்க வாழ்ந்திடுக, அறமெல்லாம் தந்திடுக.

பாருக்கே நல்லதொரு காஞ்சியின் அகிலகுரு
பாரதம் பெற்றதிரு காமகோடிப் பீடகுரு
சந்திரனைய் தண்மைதந்து சேகரனைய் வாழும்திரு மேலும்
ஜெயேந்திர இளமைகுரு, ஜெகமகனின் உற்றதிரு
அறமான ஆணையுடன் உரமான வாழ்வுதரும்
அறிவான சுடருக்கும் திருவான புனலுக்கும்
வழிபட்டு வாழும்எம் பணிவான வணக்கங்கள்.

புயல்போல இந்நாளில் பரவிடும் பிறசமயம்
'முயலாக' முன்னேற்றப் பாதையில் பின்தங்க
தெய்வச் செயலாக காஞ்சியின் கருணையில் தோன்றிட்ட
மெய்சொலும் பேரவைப் பெரியீரே வந்திடுக.

தினமும்தான் உண்டிட்டு தினமும்தான் உறங்குவோம்
மனமும்தான் குரங்காக மரமெல்லாம் தாவிடும்
தெளிவான செயல்செய்து மரம்தாவும் மனிதனை
திருப்பாவை, திருவெம்பாவை பாடலைப் பாடியே
திருப்புமோர் செயலுண்டு அதுவேஎம் முதல்தொண்டு.

வெளியுலகில் பிழைசெய்து உள்ளுலகில் மருண்டுமே
தனியுலகம் சிறைக்குள்ளே தனிமையில் தளர்ந்திடும்
மணியான மனங்களில் மணம்பொங்க பக்தியை
பணிவாக நிறைப்பதும் எம்சங்கப் பணியாகும்.

மார்கழியில் சுவைபாடல், மாந்தர் வயிற்றுக்குப்பிடியரிசி
பாவைப் பாடலதில் மனம்பதித்த மாணவர்க்கோர் எம்பரிசு
சிந்தனைக்கு சீரியதோர் சிறப்பான ஓர்விருந்து
வந்தனைக்கும் வழியுண்டு எம்சங்கச் செயல்களிலே
நலிந்துவரும் நம்சமயம் நல்லதொரு வழிகாண
நல்லோரே ! உதவுங்கள்.

உணருங்கள் முன்னோரின் உயர்வுகளை ;
சமயத்தை வளர்ப்பதோடு சமுதாயமும் வளரட்டும்
சரிபாதி இரண்டிற்கும் தந்திடுக ! வளர்த்திடுக நம்சமயம் !
வாழட்டும் நம் பின்னோர்.

அருள்பெற்று அறம்காக்க அரிதான இச்சபைக்கு
அன்புடனே அழகுடனே நல்வரவு தந்திட்ட
அலைபோன்ற அன்பர்க்கும் அறம்காக்கும் அறிஞர்க்கும்
வந்திடுக ! வளர்ந்திடுக ! வளர்த்திடுக ! சமயத்தை
என்றுவழி பாட்டின் கூட்டமான எம்சங்க
நல்வரவை ஏற்றிடுக ! மகிழ்ந்திடுக !

வணக்கம்.

இங்ஙனம்,

13 – 6 – 67 அங்கத்தினர்கள், வார வழிபாடு சங்கம்.

காரமடை, வாரவழிபாட்டுச் சங்கத்தார்
மிகப் பணிந்து வாசித்தளித்த
வரவேற்பிதழ்

யாம் செய்த தவப்பயனாய் தெய்வத்தமிழ் தழைக்கவும், இறை வழிபாட்டினால் இறைவனை அடையவும், நன்னெறியை இப்புவியில் உள்ளோர் அனைவருக்கும் எடுத்துக்காட்டி விளக்கும் மாட்சிமை பொருந்திய மகா சந்நிதானங்கள் அனைவரும் ஓரே மேடையில் காக்ஷி அளிக்க அதைக்கண்டு களித்து ஆனந்த பரவசம் ஆனோம்.

காஞ்சியின் கருணைவடிவான ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சார்ய சுவாமிகள் அவர்கள் ஆணையின்படியும், அனுக்ரஹத்தாலும், இங்கு வாரவழிபாட்டுச் சங்கம் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். வாரந்தோறும் திங்கட்கிழமை மாலை 7 மணி அளவில் காரமடை ஸ்ரீ நஞ்சுண்டேஸ்வரர் ஆலயத்தில் சுமார் 20 அங்கத்தினர்களுக்குக் குறைவில்லாது இறை வழிபாடு நடத்திவருகிறோம். மஹாப் பிரதோஷத்தன்றும் விசேஷமான பூஜைகள் செய்து இறைவழிபாடு நடத்தி வருகிறோம். ஸ்ரீ சுவாமிகள் ஆணையின்படி கூடிய விரைவில் பிடி அரிசித் திட்டமும் நடத்த முயன்று வருகிறோம். இத்துடன் எங்கள் வேண்டுகோள்களையும் தங்கள் முன் ஸமர்ப்பிக்கின்றோம். அதாவது ;-

மாந்தர்க்கு "சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறல் அரிது" போலவே சாத்திர நூல் பெறலும் அரிதாக உள்ளது. ஆதலின் பதினான்கு சாத்திரமும், உரைக்கொத்து, உரைவளம் போன்ற நூல்கள் அமையவும், பள்ளி மாணவர்கட்கு பன்னிரு திருமுறைகளில் உள்ள சுவையும், எளிமையும் உடைய திருப்பாடல்களைத் தொகுத்து நூல்களாக்கி வழங்குப்படியும், மகா சந்நிதானங்கள் ஆண்டிற்குப் பலமுறை இம்மாதிரி பெரிய நகரங்களில் கூடி சமய மாநாடுகளை ஏற்படுத்தல் வேண்டும் என்று எங்கள் வேண்டுகோள்களைத் தங்கள் திருமுன்னர் பொன்னார் திருவடிகளை வணங்கிச் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்,

13—6—67. வாரவழிபாட்டுச் சங்கத்தினர்.

தருமையில், தமிழ்நாடு தெய்விகப் பேரவை

29—7—67

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களுக்கும், மடாதிபதிகளுக்கும்

தருமையாதீனக் கல்வி நிலையங்கள்

ஏனைய ஸ்தாபனங்கள் சார்பில்

வாசித்தளிக்கப்பெற்ற

வரவேற்புரை

அருட்பெருகு தனிக்கடலாம் அறப்பெருங் குரவர்களே!

வருக! வருக! வணக்கம்! வணக்கம்!

தருமையில் நிகழும் பேரவைக் கூட்டத்திற்கு எழுந்தருளிய போது எங்கள்மேல் அருட்டிரு நோக்கம் பாலித்து இவண் எழுந்தருளிய தங்களை அடிபணிந்து வருக! வருக! என வரவேற்கின்றோம். இயல்பென்றும் திரியாது யாது சமயமும் வணங்கும் இயல்பதாகி எச்சமயத்தையும் தழுவி நிற்கின்ற நம் தனிப் பெருஞ் சைவ சமயத்தைக் கார் முகில் என வளர்த்து அனைவரையும் உய்விக்கும் பரமாசாரிய மூர்த்திகளும், மடாதிபதிகளும் இங்கு ஒருங்கெழுந்தருளியுள்ள இக் காட்சி எங்கும், என்றும், யாரும் காணப்பெறாத அரும்பெருங் காட்சி. இத்தனைப் பெறற்கரும் பேறாகப் பெற்ற பெரு மகிழ்ச்சியால் யாங்கள்

எங்களை மறந்து வாழ்த்துகின்றோம்! வணங்குகின்றோம்! வரவேற்கின்றோம் !

சிவநெறி பரப்பும் திருவருட் செல்வர்களே! வணக்கம்!

தவம் பெருக்கும் சண்பையாகிய சீகாழிப் பதியிலே அன்று தெருட்கலை ஞானக்கன்றும், திருநின்ற அரசும் திருக் கூட்டக் கடலொலி இடையே சேர்ந்து நின்று வழங்கிய காட்சியை இன்று இத் திருத்தருமைக் காட்சி நினைவூட்டு கின்றது. இத்தருமையாதீனம் சிவஞானபீடம்; சிவராஜதானி; செந்தமிழ்ப் பூங்கா; அறத்தின் உறையுள்; அருளொளி நிலையம். இதன் கண்காணிப்பில் இத்தமிழகத்தில் சிவாலயங் கள் பல செம்மையுற்றுத் திகழ்கின்றன. திருமுறை முதலான நூல்கள் பல சிறப்புடன் வெளிவந்து உலகெங்கும் பரவித் திருநெறியைப் பரப்பி வருகின்றன 'ஞானசம்பந்தம்' இதழ் ஞானவொளி வீசி வருகின்றது. எண்ணற்ற அருப்பெரு நூல் கள் நிறைந்த நூலகம் அறிவைப் பெருக்குகின்றது. பல்கலைக் கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி, வேதசிவாகம பாடசாலை, தேவார பாடசாலை ஆகிய கல்வி நிலையங்கள் பலரைக் கற்றல் கேட்டல் உடையாராகச் செய்து பணிபுரிகின்றன. இலவச மருத்துவச் சாலையும், அறவைகள் இல்லமும், (அனு தாசிரமும்) மக்கள் பலரை நல்வாழ்வு வாழ்விக்கின்றன. இத்தகைய பேரருளாட்சி நிலையத்தில் மகாசந்நிதானங்களும், மடாதிபதிகளும் ஒருங்கு கூடி வழங்கும் காட்சி, மகாகைலாசக் காட்சியாய் மிளிர்வதைக் கண்டு போற்றுகின்றோம! புகழ் கின்றோம் !

உலகினை உய்விக்கும் உயர்பெருங் குரவர்களே! வணக்கம்!

அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்னும் ஆப்தர் மொழியை நினையாமலும், ஒருக்காலும் திருக்கோயில் சூழா மலும், உண்பதன்முன் மலர் பறித்திட்டு உண்ணாமலும், மக்கள் உண்டும், உடுத்தும், கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காது, நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித் தலையாரக் கும்பிட்டுத் தண்ணருள் பெற்று உய்யவேண்டும என்த் திருவுளங்கொண்டு தாங்கள் அனைவரும் தமிழ்நாடு தெய்விகப்

பேரவையை அமைத்து, அதன்வழியே மாவட்டந்தோறும், ஊர் தோறும் உள் அமைப்புக்கள் பலவற்றை ஏற்படுத்தி, சமயப் பிரசாரங்கள் செய்யவும், தோத்திரத்திரட்டு, நீதி நூல்கள், திருமுறைப் பாடல் தொகுதிகள், சமய நூல் வெளியீடுகள் முதலியன வெளியிடவும் வழி வகுத்துள்ளீர்கள். சமயப் பிரசாரத்திற்கு வாய்ப்பாக உந்தூர்தி ஒன்றும் அமைந்திருக்கின்றது. பேரவையின் மாநிலக் குழுவில் அனைத்துச் சந்நிதானங்களும் மடாதிபதிகளும் அங்கம் வகித்திருப்பதை அறிய எங்கள் அகம் மிக மகிழ்கின்றது!

திருவாவடுதுறை ஆதீன குருமகாசந்நிதானம் அவர்கள் அம்பலவாணரது அருட் குறிப்பின் வழியே ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர்தம் ஞானச்செங்கோலை நன்கு ஓச்சி வருபவர்கள். சித்தாந்த சாத்திரங்கள், திருமந்திரம் இவற்றைச் சிறந்த உரைகளுடன் வெளியிட்டும்; கணபதி, முருகன், ஆடவல்லான் முதலிய திருவுருவ விளக்க நூல்கள் வெளியிட்டும் சிவநெறியை வளர்த்து வருபவர்கள். எங்கள் திருத்தருமை ஆதீனக் குரு மகாசந்நிதானம் அவர்கள் கயிலை கண்டு மீண்டருளிய கயிலைக் குருமணியாய் ஆலவாய்ப்பெருமான் அடிமலர்களை மறவாது "ஞாலம் நின் புகழே மிகவேண்டும்" என்று வேண்டி அதற்கு ஆவனவற்றையெல்லாம் செய்து வருபவர்கள். தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் தலைமைக்கு இரண்டாவது முறையாகவும் அனைத்து மடங்களின் ஒருமித்த கருத்திற்கு இணங்க ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பேரவையின் செயல் முறைகளைச் செம்மையாகத் திகழச்செய்பவர்கள். காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் அவர்கள் பல இடங்களுக்கும் யாத்திரை செய்து நல்லுரை வழங்கி, நாட்டு மக்களை சமயத்துறையில் ஈடுபடுத்தி வருபவர்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் அவர்கள் திருக்கேதார யாத்திரை முதலிய யாத்திரைகளை மேற்கொண்டும் சைவத்திற்கும் தமிழுக்குமாக அறக் கட்டளைகள் பலவற்றை அமைத்தும் சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்பவர்கள். நாடெங்கும் சிவம் பெருக்கும் ஒலி நிறைப்பவர்கள். மதுரை மகாசந்நிதானம் அவர்கள் நன்றியில் நெறியில் அழுந்துவோர் பலர் நன்னெறி அடையும் வண்ணம் அருளுரைகளும், அருள் உபதேசமும் செய்து வருபவர்கள். திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்கள் நாடெங்கும் அருள்நெறித் திருக்

கூட்டத்தை அமைத்து அதன் வழியாகவும் தமது அருள் உரைகளாலும் பலரை நல்வழிப்படுத்தி வருபவர்கள். காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீன மகாசந்நிதானம் அவர்கள் இயல்பாகவே தமக்கு அமைந்த கலை ஞானத்தை அவ்வப்பொழுது அனைவர்க்கும் அள்ளி வழங்கி வருபவர்கள்

மயிலம் பொம்மபுரம் ஆதீனகர்த்தர் அவர்கள் தமிழ்க் கல்லூரி நிறுவியும் திருக்கோயில்களைப் பராமரித்தும் சிறந்த பணிகளைச் செய்துவருபவர்கள். பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் மடத்து அதிபர் அவர்கள் தமிழ்க் கல்லூரி வழியாகவும் தங்கள் அறவுரைகள் வழியாகவும் தங்கள் ஆதிகுருமூர்த்திகளின் சாந்தம் எங்கும் நிலவ ஆவன செய்து வருபவர்கள். கோவை, சிரவணபுரம் கௌமார மடத்து அதிபர் அவர்கள் உயர்நிலைப் பள்ளி நடத்துவதன் வாயிலாகவும், அறவுரைகள் வாயிலாகவும் சமய உணர்ச்சியை மக்கள் உள்ளத்தில் நிலைபெறுத்துபவர்கள். திருவண்ணாமலை ஈசானிய மடத்து அதிபர் அவர்கள் துறவிகள் சங்கம் என்ற அமைப்பு ஒன்று முன்னமே ஏற்படுத்துவதற்கு உறுதுணையாய் உதவியதோடு அனாதை ஆசிரமம் அமைத்தும், பள்ளியின்மூலம் கல்விப்பணி செய்தும் சமயப் பிரசாரத்தை நடத்திவருபவர்கள். தாங்கள் அனைவரும் அருள் கூர்ந்து 'தமிழ்நாடு தெய்விகப் பேரவை' என்ற ஒரு பெரிய அமைப்பை உருவாக்கி அருள்பாலித்து வருவதை அறிந்து நாங்கள் நெஞ்சம் உருகி நிலம்பட வீழ்ந்து பணிகின்றோம். தெய்விகப் பேரவையின் அமைப்புக்கும் நடைமுறைக்கும் உறுதுணையாயிருந்துவரும் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் பி.ஏ., பி.எல்.. அவர்கள் பேரவையின் துணைத் தலைவராக இருந்து காட்டி வரும் ஆர்வம் போற்றத்தக்கது.

திருநெறிப் பெருந் தலைவர்களே! வணக்கம்!

தங்கள் திருவருள் நோக்கத்தால் தமிழ் உலகமும் சமய உலகமும் அடைந்த — அடைந்து வருகின்ற உலகியல் துறை, ஆன்மீகத்துறை நலங்கள் பல. இனியும் அவை தங்கள் தெய்விகப் பேரவையின் வழி எண்ணிறந்த பல நலங்களை அடைந்து இன்புறவிருக்கின்றன. சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும்

இனி எதிர்காலத்தின் சிறப்பும் தாங்கள் இன்று ஒருங்கெழுந் தருளப்பெற்றபேறு இதனுல் நாங்கள் எற்றைக்கும் திருவரு ளுடையோமாகின்ற பேற்றை எண்ணி இன்புற்று வணங்கு கின்றேம். எங்கட்குத் தங்கள் திருவுளங்கனிந்த அருளாசியை அருள்கூர்ந்து வழங்கவேண்டுகின்றேம்.

வாழ்க தங்கள் திருவடிகள்! வளர்க தங்கள் பேரவை! வெல்க தங்கள் திருச்செயல்கள்!

வரவேற்புப் பாடல்கள்

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

எழுதரிய மறைகளுக் கெட்டாத முழுமுதல்
எம்மான் திருக்கருணையால்
எமதுபிற வித்துயர் அறநீக்க வேவரும்
எழில்ஞானப் பெருங்குரவனே!
தொழுபவர் உளந்தனில் தோன்றுவோய், திருத்தருமை
தூயநிலை மேயபுகழோய்!
துகளில்கயி லாயமுதல் திருத்தலங் கள்பலவும்
தோத்திரம் செய்துவந்தோய்!
வழுவறுநற் பனுவலால் அறநிலைய ஆட்சியால்
வரைதற் கரும்புகழினேய்!
வருமரபின் தெய்விகப் பேரவையின் ஒருதலைவ,
வாழ்முதல் ஆருமணியே!
கெழுவுசுப் பிரமணியக் கிளர்மணி தருமையின்
கேடிலாச் செம்மாமணி
கேதங் கெடுத்தருளும் தண்மா மணிச்சரணம்
கெழுமிப் பணிந்தெழுவமே.

மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம்

திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

தெய்வத் தமிழார் வையைநதி
தேக்கு மருளில் தென்பாண்டித்
திருநாட் டுயருந் திருமதுரைத்
தேவே! ஞானசம்பந்த
சைவக் குரவ! திருவருளாம்
தவயோ கஞ்சேர் சிவயோகம்
சாரும் புகழின் திருவுருவே!
சாற்றும் ஆல வாய்முதலாய்
உய்வைப் பெருக்கி ஞாலமெலாம்
ஓங்கச் செய்யும் அருளாள!
உயரும் சோம சுந்தரனு
உவந்தே காட்சி தரும்புகழோய்!
மெய்வைத் திடுஞ்சொல் உடையோனே!
மேலாநின்றுள் முடிச்சூடி
மிளிரும் அருளே பெற்றிடவே
மெய்யிற் பணிந்து போற்றுவமே.

திருவண்ணுமலையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணுசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

கருணை நிறைந்தே உளமுருகிக்
காதலடியர் வழிபாட்டின்
கனிவுக் கிரங்கி எழுந்தருளும்
கண்ணுர் நுதல்சேர் பெருங்கடவுள்
உருவிற் றிகழ்ந்தே நாடிதனின்
உயரும் அருளார் திருக்கூட்டம்
ஒருங்கு நிறுவும் உயர்ஞான
ஒளிசேர் விளக்கே! சிவஞானம்

பெருகும் அண்ணு மலைமரபிற்
பிறங்குங் குன்றக் குடியெழுந்து
பேசும் தமிழின் தெய்வதமே!
பீடார் தெய்வ சிகாமணியாம்
குருபுங்கவ! நின் திருவடிகள்
கூடிக் களிக்கும் பெரும்பேற்றிற்
குறுகிச் சிறப்பேம் நின்றுளிற்
குளிர்ந்தே பணிந்து வணங்குவமே.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

சிவமந் திரமே தாரகமாய்ச்
சிவமே பெருக்கும் திருப்பணியோய்!
திருவே மணக்கும் திருப்பனசை
திகழத் திகழும் பெருமுனிவ!
அவமுற் றியவர் உளத்துமருள்
அகலப் பெருக்கும் நின்கருணை
அறக்கட் டளைகள் எனப்பெருகி
அரிய இமயம் முதலாகத்
தவமுற் றிலகும் குமரிமுனை
தழையச் செழிக்கும் பணிகண்டே
தளிர்ப்பேம்; குமர குருபரனே
தானுய் வந்த தகவறிவேம்;
பவமுற் றிடுவோர் துயர்போக்கப்
பார்க்கும் திருநோக் குடையோனே!
பகரும் அருணந் திக்குரவ!
பாதம் தலைமேல் ஆக்குவமே.

காஞ்சிபுரம் தொண்டைமண்டலாதீனம்

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

உலையாத கல்வியும் ஒருவாத வாய்மையும்
உண்மை யகலாத நிலையும்,
உயர்சைவ சித்தாந்த நூல்களின் உள்ளுறையும்
ஒட்ப மகலாத நலமும்,
தொலையாத கேள்வியும் துவளாத நடையுநற்
றுறவுநெறி செறி சீலமும்
தோன்றிடும் கலையாழி கச்சிநகர் ஓங்கிவரு
தொண்டைமண் டல மரபினில்
துலையாக அறநிறுவு ஞானப்ர காசனே!
துகளில்சிவ ஞான போதத்
தொன்னெறி பரப்பிவரு நன்னயச் செஞ்சுடர்
தோன்றிடு பெருந்தோன் றலே!
கலைஞானம் உயருமதி தவஞானம் ஒளிரநிறை
கமழ்மலர்த் தாளிணைகளைக்
கரங்குவித் தேத்தியெஞ் சிரமிசை புனைந்துட்
கசிந்திறைஞ் சுதுமடியமே.

பொம்மபுர ஆதீனகர்த்தர்

மயிலம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அவர்கள்

அயிலேந்து கையினேன் அருண்மலர்க் கழலடிகள்
அவைதினமும் மறவாமலே
அன்னையர் மருங்குகொள் அறக்கோல நெஞ்சிலே
அன்புறப் பதித்திருப்போன்
வெயிலேந்து செஞ்சுடர் புரந்தளிப் பதுவென்ன
விண்ணமுத மாயினிக்கும்
வித்தகம் செறிதமிழ்க் கல்லூரி நிறுவுவோன்
வியன்பொம்ம புரமருவிடும்

மயிலமலை தனில்வீர சைவம் பெருக்கிமகிழ்
மனதிற் றிருத்தமுடனே
மடியில்வரு மிரவலர் குடிமுழுதும் வாழவருள்
மலிபுகழ் கொடுக்கு மண்ணல்
துயிலாது கருமமே கண்ணுரு சிவஞான
பாலயன் என்னுநாமம்
தொழுதுவரு கென்றுகவி கூறிமிகு மொழிகளாற்
றோத்திரித் துள்மகிழுவாம்.

பேரூர் ஸ்ரீ சாந்தலிங்கர் மடம்

வித்துவான், ஸ்ரீமத். இராமசாமி அடிகள் அவர்கள்

உள்ளந் திருத்தி உயர்வாக்கும்
ஒருமைச் சாந்த லிங்கர்தரும்
உண்மை நெறியை உலகிற்கே
உரைத்து நிற்கும் அருளாள !
கள்ளந் திருத்தி மனப்புலத்துக்
காட்டுஞ் சாந்த நெறியாள !
கன்னற் றமிழிற் கல்லூரி
கட்டிக் காக்கும் உரவோனே !
தெள்ளும் இராம சாமியெனும்
திருவார் அடிகேள் ! சைவநெறி
தேச முழுதும் பரவிடவே
திட்டந் தீட்டிச் செயற்படுத்தும்
வள்ளல் ! வருக, வருகவே !
வாழ்த்தும் அடியேம் நின்னடிகள்
வணங்கிச் சூடி மகிழ்வென்னும்
வாரிநீந்தியாடுதுமே.

கோவை சிரவணபுரம்

ஸ்ரீமத். சுந்தர சுவாமிகள் அவர்கள்

சரவண பவனெனச் சாற்றிமறை யாகமம்
　　சாதிக்கு முண்மை வடிவோன்
சமரிலுறு மவுணரைச் சரியுமரு ளாற்றலைச்
　　சகமெலா முணர வைத்தே
கரகமல மாறிரண் டெனுமவற் ருலினிய
　　கருணைமழை பொழியுமுருகன்
கனகமல ரடியிணைக் கருதுமுரை வாய்ந்தே
　　கனிந்திடும் விரிவுரை யினன்
சிரவண புரத்தினில் செறியும்சுந் தரனெனச்
　　சீர்மலி திருப்பெயரினன்
செஞ்சரண மஞ்சலித் திருவிணைக் கட்டறச்
　　செந்தமிழ்க் கவிதழையவே
வருகவரு கென்றுநாம் வாழ்த்துவம் தருமையினில்
　　வாழ்ந்திடும் அடியரெல்லாம்
வண்டமிழி னுரைகளை வானமுறு முகிலென்ன
　　வரையாது பொழிந் தருள்கவே.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
அருளாணையின்வண்ணம்,

தருமபுரம்,
29—7—67.

ஆதீனக் கல்வி நிலையங்களும்,
ஏனைய ஸ்தாபனங்களும்.

மயிலமலை தனில்வீர சைவம் பெருக்கிமகிழ்
மனதிற் றிருத்தமுடனே
மடியில்வரு மிரவலர் குடிமுழுதும் வாழவருள்
மலிபுகழ் கொடுக்கு மண்ணல்
துயிலாது கருமமே கண்ணாகு சிவஞான
பாலயன் என்னுநாமம்
தொழுதுவரு கென்றுகவி கூறிமிகு மொழிகளாற்
தோத்திரித் துள்மகிழுவாம்.

பேரூர் ஸ்ரீ சாந்தலிங்கர் மடம்

வித்துவான், ஸ்ரீமத். இராமசாமி அடிகள் அவர்கள்

உள்ளந் திருத்தி உயர்வாக்கும்
ஒருமைச் சாந்த லிங்கர் தரும்
உண்மை நெறியை உலகிற்கே
உரைத்து நிற்கும் அருளாள !
கள்ளந் திருத்தி மனப்புலத்துக்
காட்டுஞ் சாந்த நெறியாள !
கன்னற் றமிழிற் கல்லூரி
கட்டிக் காக்கும் உரவோனே !
தெள்ளும் இராம சாமியெனும்
திருவார் அடிகேள் ! சைவநெறி
தேச முழுதும் பரவிடவே
திட்டந் தீட்டிச் செயற்படுத்தும்
வள்ளல் ! வருக, வருகவே !
வாழ்த்தும் அடியேம் நின்னடிகள்
வணங்கிச் சூடி மகிழ்வென்னும்
வாரிநீந்தியாடுதுமே.

கோவை சிரவணபுரம்

ஸ்ரீமத். சுந்தர சுவாமிகள் அவர்கள்

சரவண பவனெனச் சாற்றிமறை யாகமம்
சாதிக்கு முண்மை வடிவோன்
சமரிலுறு மவுணரைச் சரியுமரு ளாற்றலைச்
சகமெலா முணர வைத்தே
கரகமல மாறிரண் டெனுமவற் ருலினிய
கருணைமழை பொழியுமுருகன்
கனகமல ரடியினைக் கருதுமுறை வாய்ந்தே
கனிந்திடும் விரிவுரை யினன்
சிரவண புரத்தினில் செறியும்சுந் தரனெனச்
சீர்மலி திருட் பெயரினன்
செஞ்சரண மஞ்சலித் திருவினைக் கட்டறச்
செந்தமிழ்க் கவிதழையவே
வருகவரு கென்றுநாம் வாழ்த்துவம் தருமையினில்
வாழ்ந்திடும் அடியரெல்லாம்
வண்டமிழி னுரைகளை வானமுறு முகிலென்ன
வரையாது பொழிந் தருள்கவே.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
அருளாணையின்வண்ணம்,

தருமபுரம், 29—7—67.

ஆதீனக் கல்வி நிலையங்களும்,
ஏனைய ஸ்தாபனங்களும்.

தருமையில்

தமிழ்நாடு தெய்விகப்பேரவைக் கூட்டம்

தென்னாட்டில் சமயநெறி நன்கு பரவவும் நாட்டு மக்களிடையே பக்தியுணர்வு மேலோங்கவும் சமயஸ்தாபனங்கள் அனைத்தும் ஒன்று பட்டு இயங்கவேண்டும் என்று நல்லோர் பலரும் கருதினர். அந்த எண்ணங்கள் அனைத்தும் திருவருளால் நிறைவேறத் தொடங்கியது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும் மடாதிபதிகளும் ஒன்றுகூடித் தமிழ்நாடு தெய்விகப் பேரவை என்ற நிறுவனம் ஒன்றை அமைத்துக்கொண்டு நிலையான பணிகள் பலவற்றைச் செய்யத் தொடங்கினர். சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அவர்களின் முயற்சியால் சென்னையில் தெய்விகப் பேரவை கூடியது. முதலாண்டில் நிறுவனத்தின் தலைவராகத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் எல்லோராலும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். முதலாண்டில் தெய்விகப் பேரவையில் செயல்முறைகள் பலவும் ஆராய்ந்து திட்டமிடப் பட்டன. இரண்டாவது ஆண்டிலும் உதகையில் நிகழ்ந்த பேரவைக் கூட்டத்தில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களே தலைவராக இருக்கவேண்டுமென்று எல்லோரும் விரும்பியதற்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களும் இணங்கினார்கள். தெய்விகப் பேரவை கயிலைக் குருமணி அவர்களின் தலைமையில் சமயப்பணிகள் பலவும் செய்ய முடிவு செய்தது. 28—7—67, 29—7—67 ஆகிய இரண்டு நாட்களிலும் தருமையில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும் மடாதிபதிகளும் கூடி நல்ல பல தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

28—7—67 வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் மதுரையாதீனம், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், திருப்பனந்தாள் காசிமடம், காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம், மயிலம் பொம்மபுரம் ஆதீனம் ஆகிய மகாசந்நிதானங்களும் பேரூர் சிரவணபுரம் மடங்களின் அதிபர்களும் தருமையாதீனத்திற்கு எழுந்தருளினார்கள். திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து பிரதிநிதியாக ஒடுக்கம் சுவாமிகள் அவர்களும் வந்திருந்தார்கள். காலை 10 மணியளவில் பண்டாரக்கட்டில் தெய்விகப் பேரவைக்குழுவின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் திருமுன் தெய்விகப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் நடை

பெற்றது. பல தீர்மானங்கள் ஆராயப்பெற்று முடிவு செய்யப் பெற்றன. பேரவைக் கூட்டத்திற்கு தெய்விகப் பேரவையின் துணைத்தலைவர் திரு. M S. சாரங்கபாணி முதலியார் B, A ,B. L. அவர்களும், பேரவைக் குழுவின் செயலர் திரு. மார்க்கண்டவேல் ராஜன் அவர்களும் வந்திருந்தனர்.

திருச்சிக்கு அருகில் உத்தமர்கோயிலில் ரூ. 2½ லக்ஷம் செலவில் மருத்துவமனை கட்டுவதென்றும் மாயூரத்தில் இந்து அனுதாஸ்ரமம், சிவாகமபாடசாலை அமைப்பது என்றும் முடிவு செய்யப்பெற்றது.

28—7—67 மாலை வள்ளலார் கோயிலில் தெய்விகப் பேரவையின் சிறப்புக் கூட்டமும் பேரவையின் சார்பில் வாங்கப் பெற்றுள்ள உந்தூர்தி சமயப்பிரசாரத் தொடக்கமும் நடை பெற்றன. வள்ளலார்கோயிலில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங் களுக்கும் மடாதிபதிகளுக்கும் வரவேற்பளிக்கப்பெற்றது. விழா நடைபெறுமிடத்தில் மிகப் பெரிய பந்தலும் மேடை அலங்கார மும் செய்யப் பெற்றிருந்தன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும் மடாதிபதிகளும் திருக்கோயிலுக்கு எழுந்தருளி முறையாக வழிபாடு செய்தருளினார்கள். தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் தக்ஷிணாமூர்த்தி திருவருட்பாப் பதிகத்தை ஓதச்செய்து வழி பட்டு விழா மேடைக்கு எழுந்தருளினார்கள். முதலில் கயிலைக் குருமணி அவர்கள் பேரவையின் சார்பில் வாங்கப்பெற் றுள்ள உந்தூர்தியைச் சமயப் பிரசாரப் பணிக்குரியதாக்கித் தொடங்கிவைத்தார்கள். திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் உந்தூர்தி யின் ஒலிபெருக்கியைத் திருமுறை ஓதி இயக்கியருளினார்கள்.

மகாசந்நிதானங்களும் மடாதிபதிகளும் மேடைக்கு எழுந்தரு ளியவுடன் தெய்விகப்பேரவைச் செயலர் திரு. மார்க்கண்டவேல் ராஜன் அவர்கள் வரவேற்புரை கூறினார்கள். குத்தாலம் ராஜ கோபாலபுரம் பாலர் வழிபாட்டுச்சங்கம், மங்கநல்லூர் சன் மார்க்க சங்கம், முதலிய சங்கங்களின் சார்பில் வரவேற்புரை கள் படித்தளிக்கப்பெற்றன. மாயூரம் விசுவநாத முதலியார் அவர்கள் மகாசந்நிதானங்களுக்கு மலர்மாலை யணிவித்தார்கள். பேரவைத் துணைத்தலைவர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கள் பேரவையின் நோக்கங்களை எடுத்துரைத்தார்கள்.

பின்னர் பேரவையின் தலைவர் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தி

னார்கள். தொடர்ந்து மகாசந்நிதானங்களும் மடாதிபதிகளும் முறையே அருளுரையாற்றினார்கள். பேரவைச் செயலர் திரு. மார்க்கண்டவேல்ராஜன் அவர்கள் நன்றியுரை கூறினார். பேரவைச் சிறப்புக்கூட்டம் நிறைவுற்றது. இச்சிறப்புக் கூட்டத்திற்குப் பொதுமக்கள் பலரும் வந்திருந்து கேட்டு மகிழ்ந்தனர்.

29—7–67 காலை 10 மணி அளவில் தருமையில் இரண்டாம் நாளாகச் செயற்குழுக்கூட்டம் நடைபெற்றது. மாலை 4 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் மாயூரத்தில் கட்ட இருக்கும் அனாதாசிரமத்திற்கும் ஆகம பாடசாலைக்கும் உரிய இடங்களைச் சென்று பார்வையிட்டனர்.

மாலை 6-30 மணிக்குத் தருமையில் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் ஆதீனக் கல்விநிலையங்கள் ஏனையஸ்தாபனங் கள் சார்பில் வரவேற்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாலை 5-30 மணியளவில் சிறந்த முறையில் வரவேற்பளிக்கத் திட்டமிட்டபடி வடக்குமடத்திலிருந்து யானை எடுபிடிகள் மேளவாத்தியங்களோடு மகாசந்நிதானங்கள் வரவேற்கப்பட் டார்கள். முதலில் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவியை வழிபட்டு 6-30 மணி அளவில் மேடைக்கு அனைவரும் எழுந்தருளினார்கள்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் மகாசந்நிதானங்களுக்கும் மடாதிபதிகளுக்கும் பேரவையின் துணைத் தலைவராகிய அறநிலையத்துறை ஆணையாள ருக்கும் பொன்னாடை போர்த்தினார்கள். பேரவையின் செயலர் அறநிலைய ஆட்சித்துறையினர் பலர்க்கும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் பட்டாடைகள் அணிவித்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும் மடாதிபதிகளும் மேடை யில் எழுந்தருளியவுடன் திருமுறை ஓதப்பெற்றுச் சிறப்புக் கூட்டம் தொடங்கப் பெற்றது. சென்னை சமயப்பிரசார நிலையம் வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை கூறினார்கள்.

கல்விநிலையங்கள் சார்பில வரவேற்புரையைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர் திரு வி சா குருசாமி தேசிகர் படித்தளித் தார். வரவேற்புப்பாடல்களை முறையே திரு. சொ. சிங்கார வேலனார், திரு. சி. அருணைவடிவேல முதலியார், திரு P. சுவாமி நாதன், திரு. சொக்கலிங்கம் திரு. சா. திருஞானசம்பந்தம்,

திரு. ரா. சிவப்பிரகாசம், திரு. சம்பந்த ஓதுவாமூர்த்திகள், திரு. வை. மு. சண்முகதேசிகர் முதலியோர் படித்தளித்தனர்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் தலைமையுரை நிகழ்த்தியபின்னர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும் மடாதிபதிகளும் அருளுரைகள் வழங்கினர்கள்- பேரவையின் துணைத் தலைவர். திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கள் பேரவையின் பணிகளை விளக்கிப் பேசினர்கள்.

திருமுறை வாழ்த்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது விழாவிற்குத் தஞ்சை, இந்து சமய அறநிலய ஆட்சித்துறைத் துணை ஆணையர் திரு. ராஜா அவர்களும், நாகை உதவி ஆணையர் திரு. அர்ச்சுனன் அவர்களும் சைவப் பெருமக்களும், அன்பர்கள் பலரும் வந்து கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.



மாயூரம் - வள்ளலார்கோயிலில் நிகழ்ந்த
தமிழ்நாடு தெய்விகப் பேரவைக் கூட்டத்திற்கு
ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும், மடாதிபதிகளும் எழுந்தருளல்.

தருமையில்

தெய்விகப் பேரவைச் சிறப்புக்கூட்டம்

ஆதீனக் கல்வி நிலையங்கள் ஏனைய ஸ்தாபனங்கள் சார்பில்

அளிக்கப்பெற்ற வரவேற்பு விழாவில்

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் மடாதிபதிகள்

வழங்கி யருளிய

அருளுரைகளின் சுருக்கம்

[தருமையாதீனம் திருநெறிய தெய்வத் தமிழ்மன்றத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களுக்கும் மடாதிபதிகட்கும் ஆதீனக் கல்வி நிலையங்கள் சார்பில் 29.7-67 சனிக்கிழமை வரவேற்புக்கள் அளிக்கப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும் மடாதிபதிகளும் அருளுரை வழங்கியருளினர்கள்.]

பேரவையின் தலைவர் :

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் :-

அன்பர்களே! கால தத்துவத்தில் கட்டுண்டு கிடக்கும் நாம் காலாதீதனாக விளங்கும் பரம்பொருளைக் காலத்தில் வழிபடப் பழக வேண்டும். நம் குறைகளையெல்லாம் அவனிடம் முறையிட்டால் அவனருள் கிடைப்பது உறுதி. மனம் மொழி மெய்களால் இறைவனை வணங்கினால் ஒளியுள்ள இடத்தில் இருள் வாராததுபோல நம் மனத்தில் உள்ள அறியாமை அவன் அருள் ஒளி முன் நீங்கும். எத்தகையோராயினும் இறைவனைப் பக்தி செய்வோர் கடைத்தேறுவர்.

" கல்லாமனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான்
கல்லைப்பிசைந்து கனியாக்கி நின்கருணை
வெள்ளத்தழுத்தி வினைகடிந்த வேதியன் "

என்று மணிவாசகப்பெருமான் கூறுகின்ருர். கடைப்பட்டவரையும் கல்போன்று சடமாய்க்கிடப்பவரையும் அவனருள் உயர்த்தும்; கல்மனத்தையும் கனியாக்கும் திறன் அவனுக்கு உண்டு. கல்லேயும் கனியாக்குவதால் அவனே வல்லாளன் என்று கூறுதல் பொருந்துவதே. அத்தகைய இறைவனே நெஞ்சம் நெகிழ்ந்து வழிபடுவதே மனித வாழ்வின் பயன்.

கோவை சிரவணபுரம் ஸ்ரீமத். சுந்தர சுவாமிகள் அவர்கள் :-

தருமையாதீனம் மகாசந்நிதானம் அவர்கள் அளிக்கும் இவ்வரவேற்பு, ஞானசம்பந்தர் திருநாவுக்கரசரை அப்பரே என அழைத்து வரவேற்றதை எனக்கு நினைவூட்டுகிறது. தருமையாதீன மகாசந்நிதானம் எங்கள் தலேவர். அவர்கள் வழிநிற்போர் நாங்கள்; எங்கட்கு அளிக்கும் இச்சிறப்பு குழந்தையைத் தந்தை தன்மேல் தூக்கி மகிழ்வது போலவும் எனக்குத் தோன்றுகிறது இந்த வேளேயில் நான் உங்களுக்குச் சொல்ல நினைப்பதெல்லாம் மக்கள் சமய வாழ்வு மேற்கொண்டாலன்றி உலகில் இன்பம்பெறல் முடியாது என்பதுதான்.

பேரூர் ஸ்ரீ சாந்தலிங்கர் மடம் வித்துவான். ஸ்ரீமத். இராமசாமி அடிகள் அவர்கள் :-

தமிழ் வாழ, தழிழ் நெறிவளர, சைவநெறி தழைத்தோங்க இத் தெய்விகப்பேரவை கூடியுள்ளது. சுந்தரர் வரலாற்றில் தமிழ் கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கினீர் என்கின்ருர். தெய்வத் தமிழ் இறைவனே ஆட்படுத்தியதைக் காண்கிருேம். தெய்வத் தமிழ் நெறியில் தேயம்வாழ சைவமும் தமிழும் வளர தெய்விகப் பேரவையுடன் மக்கள் ஒன்றுபட்டுப் பணி செய்ய வேண்டும்.

பேரவையின் துணைத் தலேவர் :

திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B. A., B. L., அவர்கள் :-

மக்களுக்குக் கடவுள் பக்தி ஏற்படச் செய்வதுதான் இத் தெய்விகப் பேரவையின் நோக்கம். திருமடங்கள்தான் மக்களே ஆன்மீகத்துறையில் திருப்பிவிட வேண்டும். கடவுள் உண்டு என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கிறது. ஆனல்

அவர்களது நம்பிக்கையை மேலும் வளர்த்து அவர்களுக்குப் பக்தி யுணர்வை மேலும் வளர்க்க வேண்டும் என்பதே நம் பேரவையின் குறிக்கோள். சைவராகப் பிறந்தவர் காலையிலும் மாலையிலும் கடவுள் நாமத்தைச் சொல்லவேண்டும். இப் பேரவை மாநிலக்குழு, மாவட்டக்குழு, கிராம சங்கம் என்ற மூன்று பிரிவுகளுடன் இயங்கும். இச்சங்கத்தில் சைவராகப் பிறந்தோர் அனைவரும் உறுப்பினராக இருக்கவேண்டும். ஏதேனும் ஒரு கோயிலுக்குச் சென்று வழிபடுவதை நியமமாகக் கொண்டொழுக வேண்டும். நீங்களனைவரும் ஒத்துழைத்து இந்நிறுவனம் சமயப்பணி புரியப் பெரிதும் உதவவேண்டும்

மயிலம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் அவர்கள்:-

சிவபிரான் கயிலாயத்திலிருந்து உபதேச பரம்பரையைத் தோற்றுவித்து நிலவுலகம் சமயநெறியில் வாழ வழி வகுத்துள்ளான். அப்பரம்பரை கயிலாய பரம்பரையாய் மடாலயங்களாய் விளங்கி வருகின்றது. அந்தக் கயிலாய பரம்பரையில் ஒன்ருய் விளங்குவது தருமையாதீனம். இத்திருமடம் சைவத்தையும் தமிழையும் பேணி வளர்க்கிறது. மடங்கள் தமிழுக்கு அரணுக விளங்கி வந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. சைவ மடாலயங்கள் சார்பில் நான்கு தமிழ்க் கல்லூரிகள் நடத்தப்படுகின்றன. இக்கல்லூரிகளில் பயில்வோர் சமய உணர்வோடு தமிழ் மொழியைப் பயில்கின்றனர். இம்முறை பிற கல்லூரிகட்கில்லை. இவற்றைப்பயன் படுத்திக்கொண்டு இங்குப் பயிலும் மாணவர்கள் சமயப் பண்புகளுடன் விளக்க வேண்டும்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் :-

'எற்கமலம் செய்யும் எழில் மாசிலாமணிதன்
பொற்கமலம் சென்னி பொலிவித்து—நற்கமலை
ஊரிற்குறுகினேன் ஓர் மாத்திரை அளவில்
பேரிற்குறுகினேன் பின்'' என்ருர் எங்கள் குமரகுருபரர்.

அதாவது குருநாதன் திருமுன் அவன் திருக்கண் நோக்கப்படும் அளவில் சீவன் சிவ மாந்தன்மை பெறுகிறது என்பது இதன் கருத்து. மக்கள் குருவழிபாடு இறைவழிபாடு அடியார் வழிபாடுகளைச் செய்யவேண்டும். இறைவன் திருப்பெயரை ஓதினல் மண்ணில் நல்லவண்ணம் வாழலாம். அஞ்சியாயினும் அன்பு

பட்டாயினும் நெஞ்சம் அவனை நினைக்க வேண்டும். எல்லோரும் திருவைந்தெழுத்தை இடைவிடாமல் ஓதிப்பயன்பெற வேண்டும்.

மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் திருவருள் தவ யோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் :-

நம் சமயம் பிறமதத்தவரையும் தம்பக்கம் ஈர்க்கும் ஆற்றல் வாய்ந்தது. இந்த நாட்டில் கிறித்தவ சமயத்தைப் பரப்ப வந்த G. U போப் திருவாசகத்தில் தன் நெஞ்சைப் பறிகொடுத்தார். தன்னைத் தமிழ் மாணவன் என்று அழைக்க வேண்டுமென்று விரும்பினார். இத்தகைய பெருமை வாய்ந்த நம் சமயநெறி உலக மெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்

காஞ்சிபுரம் தொண்டைமண்டலாதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப் பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் :-

திருவருளை நம்பினோர் உலகில் பெறமுடியாதது ஒன்று மில்லை என்பதை உணர்வர். இந்த நம்பிக்கை மக்கள் உள்ளத் தில் நிலைபெற வேண்டும். திருவருள்நெறி நாட்டில் நன்கு பரவ நம்மால் இயன்ற அனைத்தும் செய்தல் வேண்டும்.

திருவண்ணாமலையாதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் :-

தமிழ் நாட்டின் மண்ணுக்குத் தனிப்பெருமை உண்டு. இம் மண்ணில்தான் அருளாளர் பலர் தோன்றினர். மிகப்பெரிய ஞானிகளும் அறிவாளர்களும் அவதரித்தனர். இம்மண்ணின் புனிதத்தைப் பாதுகாப்பது நமது கடமை.

என்னைப் பணி கொள் என்று மணிவாசகர் கேட்பதுபோல ஒவ்வொருவரும் தம்மை இறைபணிக்கு அர்ப்பணித்துக் கொள்ளல் வேண்டும். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்று ஒரு பழமொழி உண்டு. இதன் உண்மைப் பொருள் என்ன என்றால், உடலில் மூச்சுக்காற்றுள்ளபோதே உடலால் நாமடையும் பயனை அடையவேண்டும் என்பதுதான். இறைவ னுக்கு நம்மைச் சமர்ப்பணம் செய்துகொள்ளும் நிலை வந்தால் மனிதன் தெய்வமாகலாம்.

மாயூரம் - வள்ளலார்கோயிலில்

தமிழ்நாடு தெய்விகப் பேரவைச் சிறப்புக் கூட்டம்

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும், மடாதிபதிகளும் வழங்கிய

அருளுரைகளின் சுருக்கம்

[28—7—'67 வெள்ளிக்கிழமை மாயூரம் - வள்ளலார் கோயிலில் தமிழ்நாடு தெய்விகப் பேரவைச் சிறப்புக் கூட்டமும் பேரவையின் உந்தூர்தியின் சமயப் பிரசாரத் தொடக்கமும் நடைபெற்றன. அவ்விழாவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும், மடாதிபதிகளும் வழங்கிய அருளுரையின் சுருக்கம்.]

பேரவையின் தலைவர் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் தலைமையுரை :-

அன்பர்களே! இன்று ஆடி வெள்ளிக்கிழமை. அன்னை பராசக்திக்குரிய திருநாள். இந்த நல்லநாளில் அம்பிகையின் அருள் துணைகொண்டும், வள்ளலார்கோயிலில் இன்று நாம் வழிபட்ட தக்ஷிணமூர்த்தியின் திருவருள் துணைகொண்டும் தெய்விகப் பேரவையின் சமயப் பிரசாரப் பணியைத் தொடங்குகின்றோம். ஆயிரமானாலும் மாயூரமாகாது என்பார்கள். அம் மொழிக்கிணங்க அம்பிகை மயிலாயிருந்து வழிபட்ட இத்தலத்தில் இப் பேரவைக் கூட்டம் நடைபெறுகிறது. இங்கு வீற்றிருக்கின்ற அருளாளர்களை ஒருசேரக் காண்பது உங்கட்கு வாய்த்துள்ள பெரும்பேறாகும்.

"பெருந்துறையில் சிவபெருமா னருளுதலும் பெருங்கருணைப் பெற்றிநோக்கிக்
கரைந்து கரைந்து இருகண்ணீர் மழைவாரத் துரியநிலை கடந்துபோந்து
திருந்துபெருங் கொழுந்தேறல் வாய்மடுத்துத் தேக்கிச்
இருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூரடிகள்" [செம்மாந்து

என்று கூறுவதுபோலத் திருவருளைத் தேக்கிச் செம்மாந்து எழுந் தருளிய மகாசந்நிதானங்களை நீங்கள் காண்கின்றீர்கள். இத்

தகைய அருளாளர்கள் தொடங்கியுள்ள இந்தப் பேரவை தமிழக மெங்கும் சைவத்தையும் தமிழையும் தழைக்கச் செய்யும் என்பது உண்மை.

உடல் விளக்கத்திற்கு உயிர் இன்றியமையாததுபோல உயிர் விளக்கம் பெறவேண்டுமானால் இறைவன் அருள் இன்றி யமையாதது. அவனருளாலும் ஆசாரியனின் அனுக்கிரகத் தாலும் தான் எல்லாக்காரியங்களும் நடைபெறும். ஆசாரியர்கள் செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பதுபோல ஞான விருந்து அளித்துக்கொண்டே வையத்துள் வாழ்வாங்கு வாழும் தெய்வங்களாக மதிக்கத்தக்கவர்கள்; தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருந்தகையாளர்கள்.

ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார் என்று அடியார் பக்தியைச் சிறப்பிக்கின்றன சமய நூல்கள். குரு லிங்க சங்கம பக்தியே நம் சமய வழிபாட்டில் இன்றியமையாதது.

குருமார்களாக விளங்கும் இவர்கள் அனைவரும் நாட்டில் சமய நல்லுணர்வைப் பெருக்க ஒன்றுபட்டுள்ளனர்.

"சைவநெறி ஏழுலகும் பாலிக்கும் தகைமையினால்
தெய்வநெறிச் சிவம்பெருக்கும் திருவாரூர் திருவாரூர்"

என்று சேக்கிழார் பெருமான் கூறுவதுபோல, நம் சமய நெறி நாடு முழுதும் தழைக்க இப்பேரவை செயல்படும். இப்பேரவை யின் வளர்ச்சி உங்கள் ஆதரவைப் பொறுத்திருக்கிறது. எனவே இப் பேரவைக்கு மக்களனைவரும் ஆதரவு தந்து வளர்க்க வேண்டும்.

மயிலம் பொம்மபுரம் ஆதீனம் சுவாமிகள் அவர்கள் :-

சைவ சமயம் பழமையான சமயம். நம் சைவசமயாசாரியர் கள் நம் சமயத்தையும் தமிழ் மொழியையும் பாதுகாத்து நாட்டை நல்வழிப்படுத்திவந்தனர். அதுபோல அந்தப் பரம்பரையில் வந்த மகாசந்நிதானங்களும் நாட்டையும் சமயத்தையும் நம் மொழியையும் பாதுகாக்கின்றார்கள். நாட்டு மக்களுக்குச் சமய உணர்வூட்டி, திருவருள் நெறியில் மக்கள் உள்ளங்களைத் திருப்பும் முயற்சியில் இப் பேரவையை அமைத்துள்ளார்கள். இப் பேரவையின் பணிகள் எல்லாவற்றிலும் பொதுமக்கள் பங்கு கொள்ளவேண்டும்.

திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் :-

'அறஞ்செய விரும்பு' என்பது ஔவையாரின் அமுத வாக்கு. இம்மொழிக்கிணங்க இறைபணியோடு இவ்வறங்களை

யெல்லாம் இயன்ற அளவில் செய்துவருகின்றவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள்.

உயிர்கள் இம்மையிலும் மறுமையிலும் இன்புற்று வாழ இறைவன் திருநாமத்தை அன்போடு ஓதவேண்டும்.

"வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்டநெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ்மேலாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாயண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாந்தீ வினையினேற்கே"

என்று மணிவாசகப் பெருமான் கூறுவதுபோல உளம் உருகி அவரது திருநாமத்தைச் சொல்லவேண்டும். சொன்னால் "விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல் உண்ணியபுகி லவை ஒன்றுமில்லையாம் பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நண்ணிநின் றறுப்பது நமச்சிவாயவே" என்று அப்பர் பெருமான் கூறுவதுபோல நாம் செய்யும் பாவங்களை ஒழிப்பது அவன் திருநாமம் என்று கூறிச் சிவநாமத்தை எல்லோரும் ஓதும்படி செய்தருளினார்கள்.

கௌமார மடம் ஸ்ரீமத் சுவாமிகள் அவர்கள் :-

இறைவனை இடைவிடாது வழிபடுவதால் நம் மனமும் வாக்கும் காயமும் தூய்மையடையும். நாம் நம்மைச் சமய நெறியிலே நிற்குமாறு பழக்கிக்கொள்ளவேண்டும். நல்லனவற்றைப் பயின்று நல்லனவற்றையே பேசி நல்லனவற்றையே சிந்திக்க வேண்டும்.

பேரூர் ஸ்ரீ சாந்தலிங்க அடிகளார் மடம் ஸ்ரீமத் சுவாமிகள் அவர்கள் :-

நம் சமய குரவர்கள் சமயப் பணியுடன் சமுதாயப் பணியும் செய்து மக்களோடு தொடர்புகொண்டிருந்ததை அவர்கள் வரலாறு அறிவிக்கிறது. அத்தகைய பணிகளைச் செய்வதையே இன்று பேரவை குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. இன்று பலர் சமய நெறியிலே ஒழுக விரும்புகின்றனர். அவர்கட்கு இப் பேரவை உறுதுணைபுரியும். சிறைச்சாலை, மருத்துவச்சாலையில் உள்ளவர்களுக்கெல்லாம் இறைவழிபாட்டின் பயனை எடுத்துரைக்கும் பணியில் ஈடுபடும். பொதுமக்கள் இப்பேரவையின் பணிகளுக்கு உறுதுணை புரிதல் வேண்டும்.

காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் :-

மாயூரம் சிறந்த திருத்தலம். இத் தலத்தில் இறைவன் திருவருளால் இன்று தொடங்கும் முயற்சி சிறந்த பயனை அளிக்கும் என்பது உறுதி. மாயூரத்தின் நான்கு திசைகளிலும் பெருமான் வள்ளலாக வீற்றிருக்கின்றான். அவன் அருள் வள்ளலாக விளங்கி நம்மையெல்லாம் அருள் நலம் பெறச் செய்வான். அவனருள் பெற முயல்வதே சமய நெறி. அதைக் கடைப்பிடித்து மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டுமென்பதே உங்களுக்குத் தெரிவிக்கும் அறவுரை.

மதுரையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் :-

ஆஸ்திகநெறி பரப்புவதற்கென்றே இறைவன் பலரை உலகிற்கு அனுப்பியுள்ளான். உயிர்கள் பிறப்பதற்கு முன்னேயே இன்னின்ன தொழில்கள் செய்தற்குரியன என்று இறைவனால் நிர்ணயிக்கப்படுகிறது. இப்பேரவை சமயநெறி தழைக்கவும் திருநீற்றொளி தழைக்கவும் அமைக்கப்பெற்றது. மக்களனைவரும் அருள்நெறி கடைப்பிடிப்பதே வாழ்க்கையின் பயன் என்பதை உணரவேண்டும். "அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை" என்பது வள்ளுவர் வாக்கு. இப்பேரவையின் வழியே அனைவரும் மேன்மைகொள் சைவ சமய நெறிகளை உணர்ந்து பயன்பெற வேண்டும்.

குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் :-

நாடோறும் காலையில் நாம் விழித்தெழுகின்றபோதே இறைவன் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டே எழப் பழக வேண்டும். சில நாட்கள் சொல்லிப் பழகினால் அதுவே நமக்கு பழகிப் பழகி நம் இயல்பான வழக்கமாக மாறிவிடும். இடைவிடாமல் அவனது திருநாமத்தைச் சொல்லி அழைக்கும் நிலை நமக்கு வருமானால் அவன் நம்மை நிச்சயம் அணுகிவருவான். மனிதனுடைய இதயம் ஊமையாக இருந்தாலன்றி இறைவன் செவிடாக இருப்பதில்லை. எனவே மக்களிடையே இறைவனைத் தோத்திரித்து அழைத்து வழிபடும் முறை வளரவேண்டும். சமய ஒழுக்கத்தின் இரண்டு கால்கள் போல பக்தியும் தொண்டும் உள்ளன. இவ்விரண்டு முறைகளினாலேயே சமய நெறி நாட்டில் பரவவேண்டும். சைவ மக்களனைவரும் அருள் நெறி வளர்க்கும் பேரவையோடு தொடர்புகொள்ளவேண்டும். ஒரு கோயிலை வழிபடுமிடமாகக் கொள்ளவேண்டும். இத்தகைய கட்டுப்பாடுகளை மக்கள் மேற்கொண்டால் சமய நெறி தழைக்கும்.

தமிழ்நாடு தெய்விகப் பேரவை சார்பில்:

மாயூரம் - வள்ளலார்கோயிலில்,



தெய்விகப்பேரவைத்தலைவர்,

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள்

உந்தூர்தி. சமயப்பிரசாரத்தைத் தொடங்கிவைத்தல்.

தையல்நாயகி அந்தாதி

[மூலமும் உரையும்]

உரை ;- தருமையாதீனப்புலவர், பண்டித, வித்துவான்,

திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

(மலர் 26, இதழ் 8. பக்கம் 138 இன் தொடர்ச்சி)

காந்த னிரந்துணி நால்வாய் முதன்மகன் காணிளையோன்
சேந்தன்வா யாறுளன் அண்ண னுறிநெய் திருடினவன்
சாந்தத் தயிலம்விற் றுண்டிடு மேழைநிற் சார்ந்தவர்க்கே
யீந்தருள் செய்வதெவ் வாருந் தயிலம்மை யெற்குரையே. 83

(இ - ள்) தயிலம்மையே! காந்தன் இரந்து(ண்)ணி - தேவரீருடைய தலைவரோ பிரமகபாலத்தை யேந்தி பிட்சாண்ட வராய்த் திரிபவராவர், நால்வாய் முதல் மகன்காண் - நின் மூத்தமகனோ நால்வாயுடையவன் (தொங்குகின்ற வாயினை யுடையவன், இளையோன் வேந்தன் ஆறுவாயுளன் - இளைய பிள்ளையாரோ என்றால் ஆறு வாயினையுடையவன் (ஆறுமுகன் என்றபடி) அண்ணன் உறிநெய் திருடினவன் - நின் தமைய னாகிய திருமாலோவெனில் ஆயர்சேரியில் உள்ள உறிக்கண் கட்டின நெய்யினை வாரித் திருடியுண்டவனாவன், (தேவரீரோ எனில்,) சாந்தம் தயிலம் விற்று உண்டிடும் ஏழை - கருணையாகிய எண்ணெயினை மக்களிடம் விற்று அதனாலாகிய ஊதியப்பொருள் கொண்டு காலங்கழிக்கும் ஏழையாகுவை. (இங்ஙனமாக) நின் சார்ந்தவர்க்கு ஏ - நின்னைச் சரணாகதியடைந்தவர்கட்கு, ஈந்து அருள்செய்வது எ ஆறு ஆம் எற்கு உரை ஏ - கொடுத்துக் கருணைபுரிவது எந்நெறிகொண்டு ஆகும், அதனை அடியேற்குத் திருவாய்மலர்ந்தருளுவீராக (எ - று).

(கு - ரை) நால்வாயன் - மூத்தபிள்ளையாராகிய விநாய கப் பெருமான். வாய் ஆறுளன் - சண்முகப் பெருமான், அண்ணன் - அறுகினவன் (திருமால்). சாந்தம் - பொறுமை. ஏகாரம் அசைநிலை.

எற்குரை யென்றுனை யேவல்கொண் டேனென் றெனைமுனியேல்
நிற்குரித் தாகிய சேயென் முறைமை நிகழ்த்தினனுற்
சொற்குல வுங்கவி வாணர்க் கிரங்குஞ் சுகுணமுளாய்
எற்குல வும்பொழில் வேளூர்த் தயிலம்மை யேத்தினனே. 84

(இ - ள்) சொல்லேவும் கவிவாணர்க்கு இரங்கும் சுகுணம் உ(ள்)ளாய் - அறுவகைச் சொற்களும் மறுவின்றி நடமாடும் நாவன்மையுற்ற நாலுவகை கவிராயர்கட்கும் திருவுளம் இரங்கி யருளும் நற்குண வடிவினளே! எல் குலவும் பொழில் வேளூர் தயிலம்மை - சூரியமண்டலமளவும் நீண்டுயர்ந்த சோலைகள் சூழ்ந்த வைத்தீசுவரன்கோயில் என்னும் பதியில் வாழும் தையல் நாயகித் தாயே! எற்கு உரை. என்று தேவரீர் அடியவனுக்குக் கூறியருளுக என்று, ஏவல் கொண்டேன் என்று எ(ன்)னை முனியேல் - கட்டளையிட்டுளேன் எனக்கருதி ஏழையனை சின வற்க. நிற்கு உரித்து ஆகிய சேய் என் முறைமை நிகழ்த்தினன் (ஆல்) - தேவரீருக்குரிமையுடைத்தாகிய மகவென்னும் மரபுகொண்டு விண்ணப்பித்துவிட்டேன், ஏத்தினன் - தேவரீருடைய கீர்த்திகளையெடுத்துத் துதித்துள்ளேன் (அருள்புரிக) எ - று.

(கு - ரை) சுகுணம் - (வடமொழி) நல்லதன்மை (பண்பு) சேய் - பிள்ளை, முனிவு - வெறுப்பு. (சினம்) முறைமை - உறவு முறைமை, நிகழ்த்துதல் - கூறல். கவிவாணர் - கவிபாடி வாழ்பவர். (புலவர்),

ஏத்தின னுமந் திருவடித் தொண்டுசெய் தின்மலரைச்
சாத்தி யருச்சிக்க நெஞ்சொரு தேகந் தளர்வின்றியே
நேத்திய தாக வேவரந் தந்தரு ணேசமுற்றே
பாத்திய மாகிய வேளூர்த் தயிலம்மை பாங்குனக்கே. 85

(இ - ள்) நேசம் உற்று பாத்தியம் ஆகிய வேளூர் தயிலம்மை - அன்பு பொருந்தி உரிமை பூண்டுகொண்டருளியவ ராகிய வைத்தீசுவரன்கோயில் எனும் பதியில் வதிந்தருளும் தயிலம்மைத்தாயே! உனக்கு ஏ பாங்கு (ஆம்) - தேவரீருக்கே பெருமையாகும். திருவடி தொண்டு செய்து நாமம் ஏத்தினன் - திருவடிகட்கு அடிமைத்தொழில் புரிந்து நின்னழகுறு திருப்புகழ் நாமங்களையே சொல்லித் துதித்துள்ளேன். இன் மலரை சாத்தி அருச்சிக்க நெஞ்சு ஒரு தேகம் தளர்வு இன்றி ஏ நே(ர்)த்தியது ஆ(க)வே ஏ - புட்பவிதியிற் கூறிய இனிய நறும் பூக்களைக் கொண்டு திருவடிகளிற் போட்டு அருச்சனைபுரிய மனமும்

உடலும் தளர்வின்றி திடமிகவுறுமாறு, நேசம் உற்று வரம் தந்து அருள் - அன்புற்று வரமருளிக் காப்பாற்றுவீராக (எ - று).

(கு - ரை) பாத்தியம் - உரிமை, நேர்த்தி - நலமிகும் அழகு. தொண்டு - அடிமை. பாங்கு - பெருமை. மலர் - விரிவு (அலர்தல்) . தளர்வு - சோர்வு. (எ - று)

பாங்கமென் னங்கத்தை யாலய மாக்கிப் பரிமணமா
மாங்கா வகலினி லன்புநெய் தேக்கி யறிவெனுமோர்
தேங்காத் திரியிட்டு வைத்தன னின்னருட் டீபிகையை
நீங்காம லேற்றிடு வேளூர்த் தயிலம்மை நேசமுற்றே. 86

(இ - ள்) பாங்கு ஆம் என் அங்கத்தை ஆலயம் ஆக்கி - நலமாகப்பண்ணிய அடியவன்றன் உடலத்தைத் தேவரீர் எழுந் தருளுவதற்குரிய திருக்கோயிலாகச்செய்து. பரிமணம் ஆம்மங்கா அகலினில் அன்பு நெய் தேக்கி மணமுடைத்தாக குன்றுத லற்ற அகல் என்னும் பாண்டத்தில் அன்பு எனப்படும் நெய் யினை நிறைவுற வார்த்து, அறிவு என்னும் ஓர் தேங்கா(த) திரி யிட்டு - ஞானமெனப்பெறும் ஒப்பற்ற தடையின்றியுய்க்கும் திரியினைப் போட்டு, வைத்தனன் - தமியனேன் அமைத்துள் ளேன் ; வேளூர் தயிலம்மை நேசம் உற்று(ஏ) - வைத்தீசுவரன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்மையே தேவரீர், திருவுள மிரங்கி யன்புவைத்து. நின் அருள்தீபிகையை நீங்காமல்ஏற்றிடு- நினது கருணையாகிய பிரகாசத்தின் (விளக்கினை) என்றும் நினைக்குமாறு பொருத்திவைத் தருளுக (எ - று).

(கு - ரை) பாங்கு - நலம். மாங்கா - நீட்டல்விகாரம் (மங்கா என்பது மாங்கா வெனவாயது) தேக்கல் - நிரப்பிடல், தீபிகை - விளக்கு, தேங்கல் - தடைபடல். ஏ அசைநிலை.

சத்தாதி யைந்தி னெறியேயென் பாழ்மனம் சார்ந்துநிதம்
பித்தா யலைந்து மெலிந்து புழுதிப் பெருநரகிற்
றத்தா விருந்தழி யாமனுன் னேக்கரு டான்றருவாய்
நத்தா வுரைத்தனன் வேளூர்த் தயிலம்மை நன்மையதே. 87

(இ - ள்) சத்தம் ஆதி ஐந்தின் நெறி (ஏ) என் பாழ்மனம் சார்ந்து நித்தம் பித்து ஆய் அலைந்து மெலிந்து புழுதி பெருநரகு இன்தத்தா இருந்து அழியாமல் - சத்தம் இரதம் கந்தம், பரிசம், உருவம் ஆகிய புலன்கள் வழியாகவே அடியே னுடைய பாழாகிய மனம் பற்றி நாடோறும் பித்துத்தன்மை

யுடைத்தாகி அலந்து மெலிவுற்று புழுதியாகிய பெரிய நரகின்கண் விட்டுத் தாவி இருந்து அழியாதபடி, உன்நோக்கு அருள்தான் தருவாய் - தேவரீருடைய திருவருள் கடைக்கண் சாத்தியருள்வாய், வேளூர் தயிலம்மை. நன்மையது (ஏ) நத்தா உரைத்தனன் - வைத்தீச்சுரன்கோயில்என்னும் திருக்கோயிலின் கண் எழுந்தருளி யிருக்கும் பாலாம்பிகையே! நன்மையாயிதை விரும்பியே விண்ணப்பித்துள்ளேன். (எ - று.)

(கு - ரை) ஆகிய என்பது ஆய்எனவாயது. தத்தா என்பன செய்யா வென்னும் வாய்பாட்டு வினை யெச்சங்கள். நத்தல் - விரும்பல். நத்தி - தாவி. நோக்கு - அருட்பார்வை. பெருநரகு - இளரைவாதி நிரயங்கள் (மீளாநரகம்). தான் - அசைநிலை. நெறியே - ஈண்டு ஏகாரம் தேற்றம்.

நலந்திகழ் கூடற் பதிக்கர சாகிய நாளுலகை
வலம்புரிந் தியாரையும் வெற்றிகொண் டின்புறு மாதங்கியே
நிலஞ்சுமக் கப்பய னின்றிப் பிணியுண நிற்றனன்றே!
சலம்புரி யாதருள் வேளூர்த் தயிலம்மை தாணிழலே. 88

(இ - ள்) நலம்திகழ் கூடல் பதிக்கு அரசு ஆகிய நாள் (பல்வகை வளங்களாலும் செழித்து) பேரின்பநலந் திகழ்கின்ற நான்மாடக்கூடலாகிய மதுரையம்பதிக்குத் தமிழ்ப்பேரரசு. ஆகிய நாளில் (தடாதகைப்பிராட்டியாராகி) உலகை வலம் புரிந்து - அட்டதிக்காகிய உலகத்தை வெற்றிகொள்வான் வலமாகவந்து, யாரையும் வெற்றிகொண்டு - எட்டுதிக்கினையும் ஆளுகின்ற இந்திராதியரை சயங்கொண்டு, இன்புறும் மாதங்கி ஈசான தீசாநாதராகி வந்த சோமசுந்தரக்கடவுளை மணந்து நலந்துதி சத்தியே! நிலம் சுமக்க பயன் இன்றி பிணிஉ (ண்) ணருற்றல்நனிறுத்து பூமிதேவி பாரமாகத்தாங்க (பூமிக்குப் பாரமாக) மக்கட் பிறப்பெடுத்ததனுலாகிய பயன் சிறிது இல்லாமல், பிறப்பு இறப்பும் அதற்கிடையில் நோயும் அடியன் பிணித்து அருந்த, இருப்பது நன்மையாகுமா? வேளூர் தயிலம்மையே, தாள் நிழல் ஏசலம் புரியாது அருள் - திருவடி நிழலினை வஞ்சனை இன்றி தந்து கருணை புரிவாயாக.

(கு - ரை) நலம் - இன்பு, மாதங்கி - அம்மையின் பொதுப் பெயராகிய சத்தி என்பதாம். சலனம் - வஞ்சகம். தாள்நிழல்- முத்திப்பெறுதல்.

(தொடரும்)

வேளூர் தேவஸ்தானம் (வைத்தீசுவரன்கோயில்)

இலவச சித்த வைத்தியசாலை,

டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

தேன்

நாம் உண்கின்ற தேனில் பலவகைகள் உள்ளன ஒவ்வொன்றிற்கும் ஒரு சிறப்புகுணம் பொருந்தியிருப்பதை நீங்கள் அறிந்தால் மிகவும் ஆச்சரியப்படுவீர்கள். பெரிய மலைகளிலிருந்து எடுக்கப்படும் தேனுக்கு குறிஞ்சிநிலத் தேன் என்று பெயர். குளிர்ச்சியினால் ஏற்படக்கூடிய காசம், சுவாசகாசம் (Asthma) விக்கல், கண்ணில் உண்டாகும் ரணம், சுரம், தேக கடுப்பு. இவைகளை அறவே நீக்கும். நல்ல பசியும், தேக புஷ்டியும் உண்டாகும். அதனால்தானோ என்னவோ

"தேனும் திணைமாவும் முருகன்
தின்று கொழுத்தாண்டி"

என்ற ஒரு நடோடி பாடலும் இருக்கின்றது. பாடுகின்றவர்களுக்கு நல்ல தொனியையும் உண்டாக்கும். அதனால் வால்மிளகு, சித்தரத்தை, தூதுவேளைவேர், தேன் கற்கண்டு இவைகளைக் கலந்து வாயில் அடக்கிகொண்டு உமிழ்நீரை உள்ளே விழுங்கவேண்டும். அதனால் தொண்டையில் ஏற்படும் கரகரப்பு, தொண்டைக்கட்டு முதலியன அறவே நீங்கும்.

மாமரம் போன்ற பெரிய மரங்களிலும், காடுகளில் உள்ள பெரிய மரக் கொம்புகளிலும் கட்டுகின்ற கொம்புத்தேன் வாத பித்த சிலேத்மம் ஆகிய மூன்று தோஷங்களையும், குழந்தைகளுக்கு காண்கின்ற மாந்தம், அரோச்சகம் இவற்றைப் போக்கவல்லது.

பெரிய மரங்களின் பொந்துகளிலும், அதன் பிளப்புகளிலும் கட்டுகின்ற தேன் ஜடாராக்கினியையும், உஷ்ணத்தையும் உண்டாக்கும். பலவிதமான விக்கல்களையும், அஜீரணத்தையும், விடாத இருமல் அதி தூல சரீரம் ஆகியவைகளைப் போக்கவல்லது. புற்றுக்களில் கட்டுகின்ற தேனைப் பருகினால் கப தோஷம், ஈளைக்ஷயம், இருமல், வாந்தி, முதலியவைகளும் சகல நேத்திர ரோகங்களும் நீங்கும்.

வீடுகளில் கட்டுகின்ற தேனை விடாது வெந்நீர் அல்லது பால் கலந்து உண்டுவந்தால் மதுமேகத்தினுல் ஏற்படக்கூடிய விரணம், புறை ஓடக்கூடிய புண், கரப்பான், நேத்திரரோகம், புழுவெட்டு, சிலேத்மம் சம்மந்தமான நோய், டி. பி. போன்ற காசரோகம் முதலியன நீங்கும். பொதுவாகத் தேன் நல்ல பசியை உண்டாக்கும். ஆனுல் அவ்வப்போது கிடைக்கின்ற சுத்தமான பொதுத்தேனையே உபயோகிப்பது நல்லது. அதனுல் தேக வெப்பத்தைக் குறைத்து நல்ல அழகை உண்டாக்கும். நிறைந்த ஆயுளைக் கொடுக்கும். மிகப்பழைய தேனை உண்டால் அதில் ஒரு புளிப்பு கலந்த இனிப்பு ஏற்படுவதால் வாதரோகத்தையும் வயிற்றில் ஒருவித எரிச்சலையும், மூலரோகத்தையும் உண்டாக்கி விடும். நன்மை பயக்கத்தக்க நன்மருந்துகளின் நற்குணங்களைக் கெடுத்துவிடும்.

தேனிலிருந்து உண்டாகக்கூடிய கற்கண்டு மிகச் சிறந்த தாகும். கற்கண்டினுல் கண்ணில் படரக்கூடிய துர்மாமிச படலத்தைத் தேய்த்து எடுத்துவிடலாம், கபசம்பந்தமான நோய் களையும், வாதநோய்களையும், சுரவேகத்தையும் போக்கக்கூடியது பாடகர்களுக்கு இது ஓர் அறிய பொக்கிஷமாகவே உதவுகின் றது, இதை சாகித்தியம் செய்யும்போது வாயில் அடக்கிக் கொண்டிருந்தால் தொண்டையில் ஏற்படகூடிய கரகரப்பைப் போக்கி நல்ல கம்பீரமான இனிய குரலை உண்டாக்கும்.

தேனைக் காய்ச்சி பாகுபோல்செய்தும் சாப்பிடலாம். அப்படி சாப்பிட்டால் பித்த ஆரோச்சகம் வாந்தி இவைகளை நீக்கும். அதனுல்தான் நம்நாட்டு மருத்துவர்கள் சில முக்கியமான பற்ப செந்தூரங்களைத் தேனில் கலந்து சாப்பிடச் சொல்கிறுர்கள். இது ஆகாரமாகவும் பயன்படுகிறது. வியாதியைப் போக்கி சுகத்தையும் கொடுக்கிறது.

பொதுவாகத் தேன் அருந்தினுல் அது சீரணமாவதற்குப் பன்னிரண்டு நாழிகைகள் (சுமார் ஐந்து மணி ஆகும். நாள்பட்ட அஜீரணம் பசியின்மை, மலச்சிக்கல் இவைகளுக்குத் தேனை வெந்நீரில் கலந்து அதிகமாக உண்டுவந்தால் தீபன சக்தியை உண்டாக்கும். ஆகையால் இதற்கு "தீபகம்" என்றெரு பெயரும் உண்டு.

சிறு குடலில் மலத்துடன் கபம் இறுகப்பற்றிக்கொண்டு நாளடைவில் அதிச்சாரம் கிராணி, மலச்சிக்கல் ஆகிய நோய் களை உண்டாக்கும். இவற்றிற்குப் பெருங்குடலிலுள்ள மலத்தை இனிமா மூலம் போக்கி மறுபடியும் போதுமான அளவு தேனை

இனிமா மூலம் பெருகுடலுக்குள் செலுத்தினல் பெருகுடலில் தங்கிய கபம் பிரிந்து மலச்சிக்கலே நிரந்தரமாகப் போக்கவல்லது. இம்முறையை மலபாரில் இன்றும் உபயோகிக்கின்ருர்கள், இதனல் தேனுக்கு "கிராகிறி" என்னும் பெயரும் உண்டு.

கண்களுக்குத் தேன் ஓர் அற்புதமான மருந்து. நாட்டுப்புறங்களில் சாதாரணமாகக் கண்களில் ஏற்படக்கூடிய கண் நோய் போன்ற நோய்களுக்குக் கண்ணில் தேனே கட்டுவது வழக்கம். பெண்களுக்கு கண்களில் தீட்டும் மைகளில் தேனேயும் கலந்து உபயோகித்து வந்தார்கள். இது கண்களில் வரக்கூடிய பீளே நோய் மற்றும் தொற்று நோய்கள் வருவதைத் தடுப்பு முறையாக அமைந்திருந்தது. இதனல் தேனுக்கு "சக்ஷீஷயம்" என்ருெரு பெயரும் உண்டு.

(தொடரும்.)

இம்மாதம் நம் வைத்தியசாலேக்கு வந்து சிகிச்சை பெற்றவர்கள் விபரம்.

ஆண்கள்	985	
பெண்கள்	878	
குழந்தைகள்	816	(12 வயதுகுட்பட்டவர்கள்)
	2679	

வைத்தியக் குறிப்பு

Dear Friend,

Visited the Free siddha hospital run by the Velur Devasthanam. Needless to say that I was much impressed by the manner you behave with the patients and treat them. Every thing seems to be in perfect condition to let you work peacefully for the suffering humanity.

May the Supreme bless you with His Grace.

With regards and thanks,
Yours Sincerely,
Dr. J. Pierrey,
Eye. Specialist (Paris University)
Head of the ophthaimic Dept.
General Hospital.
Pondicherry.

மதிப்புரை :

சிவஞானபோதம் - உரை

[ஆசிரியர்: திருக்குறள்வேள், திரு. ஜி. வரதராஜப் பிள்ளை அவர்கள் B. A., திருச்சிராப்பள்ளி.]

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் மெய்கண்டார் அருளிச் செய்த சிவஞானபோதம், மிக்க அருமையும், பெருமையும் வாய்ந்தது என்பதும், அதற்கு மாதவச் சிவஞான யோகிகள் சிற்றுரை, பேருரை என்னும் இரண்டு அரிய உரைகளை வகுத்துள்ளார் என்பதும் யாவரும் அறிந்தவை. மேற்குறித்த சிற்றுரை பேருரைகள் இக்காலத்தில் பலர்க்கு உணர்தற்கு அரியனவாய் இருத்தல் பற்றி சிவஞானபோதத்திற்கு எளிய உரைகளையும், விளக்கங்களையும் அறிஞர் பலர் அவரவர்க்கு அமையம் வாய்க்கும் பொழுது செய்துவருதல் கண்கூடு. இவ்வகையில் திருச்சிராப் பள்ளித் திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A., அவர்கள் இந்நூற்கு எளிய உரை ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

திரு. பிள்ளையவர்கள் திருக்குறளுக்கு எழுதி வெளியிட்ட விளக்க உரை ஒன்றைப் பலர் படித்துப் பயன்பெற்று வருகின்றனர். அவ்வுரையின் சிறப்பு நோக்கித் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் இவர்கட்கு, 'திருக்குறள் வேள்' என்னும் பட்டத்தை வழங்கியருளினார்கள்.

திருக்குறள்வேள் அவர்கள் சைவசித்தாந்தத்தில் பெரிதும் ஈடுபாடுடையவர்களாய்ப் பல்லாண்டுகள் தக்காருடன் சித்தாந்த சாத்திரங்களை நன்கு ஆராய்ந்துள்ளார்கள். திருச்சிராப்பள்ளியில் பல்லாண்டுகள் சித்தாந்த நூல்களைக் கோடை வகுப்பாக முன்னின்று நடத்தியுள்ளார்கள். இவ்வாண்டு திருத்தவத்துறையில் (லால்குடியில்) சிவஞானபோத வகுப்பையும், சித்தாந்தச் சொற்பொழிவுகளையும் தக்காரைக்கொண்டு தாங்களே நடத்துவித்தார்கள். திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தில் சென்ற ஓராண்டுக் காலம் 'சித்தாந்தக் கலாநிதி' உயர்திரு. ஔவை, சு. துரைசாமி பிள்ளையவர்களது தத்துவத் தொடர்ச்சொற்பொழிவு மாதந்தோறும்

நடைபெற்றமைக்கு இன்றியமையாதவராய் இருந்தவர் பிள்ளையவர்களே. 'அச்சொற்பொழிவின் சாரமே இவ்வுரை' என்பதைப் பிள்ளையவர்களே தங்கள் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்கள். தத்துவச் சொற்பொழிவு ஆற்றிய உயர்திரு. பிள்ளையவர்கள் சிவஞானபோதப் பொருள்களை எவ்வெவ்வகையில் எளிமைப்பட எந்த எந்த நூல்களிலிருந்து என்ன என்ன மேற்கோள்கள் காட்டி விளக்கினர்களோ அந்த விளக்கங்கள் பலவற்றுடனும் விளங்குகின்றது இவ்வுரை. அதனல், அதிகரணப் பிரிவுகள், அளவை நூல் வாய்பாடுகள், பிற சமயப் பெயர்கள் முதலியன இன்றிச் சொற்பொழிவு முறையில் சிவஞானபோதப் பொருள் இதன்கண் எளிமையாக விளக்கப்பட்டுள்ளது. இன்னோரன்னவற்றில் கருத்து வேறுபாடுகள் சில அமைந்திருத்தல் இயல்பே. அவைகளை அவர்களது கருத்து என்று போகலாம். பொதுவாகச் சிவஞானபோதச் சிற்றுரை பேருரைகளைப் பயில்வதற்கு முன் அந்நூற்பொருளை ஒருவாறு உணர்ந்துகொள்வதற்கு இவ்வுரை பெரிதும் உதவுவதாகும். புத்தகத்தின் விலை 50 காசுகள்.

கிடைக்குமிடம் :- (1) செயலாளர், திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம். மேலரண்சாலை, திருச்சிராப்பள்ளி 2.

[சி. அ.]

செய்திகள்

தருமையாதீனத்தில்

மகாகயிலாயக் காட்சி

எட்டாவது ஆண்டு விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் கண்டு மகிழ்ந்த மகா கயிலாயக் காட்சி எட்டாவது ஆண்டு விழா 5—8—67 சனிக் கிழமை யன்று சிறப்பாக நடைபெற்றது. காலையிலும் மாலையிலும் திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன மடாலயத்தில் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் பூஜைமடத்தில் திருக்கயிலாயத் திரு வுருவப் படத்திற்கு வழிபாடு நிகழ்ந்தது. விழா மலராக "திருக் கழுமல மும்மணிக்கோவை" என்ற நூல் குறிப்புரையுடன் வெளியிட்டு வழங்கப்பட்டது. நண்பகலில் மாகேசுவரபூஜையும் இரவு வெள்ளி இரதத்தில் திருக்கயிலாயத் திருவுருவப்படத் திருவீதியுலாவும் நடைபெற்றன.

திருவீதியுலாவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களும் எழுந்தருளி கயிலைப் பதிகப் பாராயணத்தைக் கேட்டு மகிழ்ந் தார்கள். திருக்கயிலாய நிலையத்தில் திருக்கயிலாயத் திருவுருவப் படத்திற்கு வழிபாடு நிகழ்த்திய பின்னர், திருவாவடுதுறை ஆதீன ஓதுவாமூர்த்திகள் திரு. சோமசுந்தரதேசிகர் அவர்கட்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னாடை வழங்கியருளினார்கள்.

மாலை 5 மணி முதல் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் பூஜை மடத்தில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. அவ்வமயம் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் "ஆளுடைய பிள்ளையும் கயிலையும்" என்ற தலைப்பிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், தருமையாதீனப்புலவர், சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான். திரு. சி. அருணை வடிவேல் முதலியார் "ஆளுடைய அரசும் கயிலையும்" என்ற

தலைப்பிலும், மன்னன்பந்தல் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், செஞ்சொற்கொண்டல், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் M. A., "ஆளுடைய அடிகளும் கயிலையும்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்கள்.

சமயப் பிரசார நிலையத்தின்

நூறுவது மாத வழிபாடு

சென்னை தியாகராய நகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் நூறுவது மாதவழிபாடும் சமயப்பிரசாரமும் 23—7—67 ஞாயிறு மாலை மயிலாப்பூர் ஸ்ரீ கபாலீஸ்வரர் ஆலயத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. நிலைய வழிபாட்டுக் குழுவின் சார்பில் ஸ்ரீ கற்பகாம்பாளுக்கும் ஸ்ரீ கபாலீஸ்வரருக்கும் அபிஷேக ஆராதனை செய்யப்பெற்றன, குழுவினர் தேவாரத் திருமுறைஓதி முறையாக வழிபாடாற்றினர்.

வழிபாட்டின் பின்னர் ஆலயப்பிரசார மண்டபத்தில் நூறுவது சமயப் பிரசார விழா நடைபெற்றது. தொழிலதிபர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் விழாவைத் தொடங்கிவைத்தார்கள். தொடக்க உரையில் இந்தோனேஷியாவில் சோழர்காலக் கற்கோயில் இருக்கிறது, பாலித்தீவிலும் சோழர்காலக் கோயில்கள் உள்ளன. இந்து மதமும் உருவ வழிபாடும் கிழக்கு, மேற்கு நாடுகளில் பரவி இருந்தது. இஸ்லாமியர் உருவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லாதிருந்தமையால் இந்துக்கள் கோயில்களை அழிக்கத் தொடங்கினர். அதனால் நமது எல்லை குறுகலாயிற்று. இந்த விபரங்கள் எல்லாம் புதைபொருள் ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்படுகின்றன. சர்வகலாசாலை புதைபொருள் ஆராய்ச்சிக்கு முதலிடம் கொடுத்து ஆவனசெய்யவேண்டும். இந்துக்கள் சென்ற கோயில்கள் போக இனி இருக்கும் கோயில்களையாவது நல்லமுறையில்பாதுகாக்கவேண்டும். பலகோயில்கட்கும்சென்று வழிபாடு செய்தால்தான்' கோயில்களின் புனிதத்தன்மையும் வரலாறு, பண்பாடு முதலியனவும் நமக்கு நன்கு தெளிவாகும். தருமை ஆதீன சமயப் பிரசார நிலையம் 14 ஆண்டுகளாக நல்ல பணிகளை சென்னை வட்டாரத்திலும், தமிழகத்திலும் செய்து வருவது பாராட்டத்தக்கது. அந்நிலையத்துடன் மக்கள் தொடர்பு கொண்டு நூறு மாதங்களாக வழிபாட்டையும் இந்து சமயப்

பிரசாரத்தையும் செய்துவந்திருப்பது எதிர்காலத்தின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது என்றார்.

சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை விழாவிற்குத் தலைமை வகித்தார். "திருக்கோயில்" ஆசிரியர் திரு. N. R. முருகவேள் "சமயப் பிரசாரப் பணி" என்பது பற்றி ஆய்வுரை நிகழ்த்தினார். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறுகையில் புத்தமதச் சார்புள்ள அரசாங்கம் நடக்கும் இலங்கையில் எல்லாச் சமயங்களுக்கும் பள்ளிக்கூடங்களில் இடம் அளித்து மதபோதனையைக் கட்டாய பாடமாக நடத்தும்போது, எல்லாச் சமயங்களையும் முதன்மையாக நோக்கும் மதச் சார்புள்ள நமது இந்திய அரசு எல்லாப் பள்ளிகளிலும் சமயப் பாடத்தைக் கட்டாய பாடமாக நடத்தவேண்டும் என்பதை வற்புறுத்தினார்கள். தருமபுரம் சங்கீதபூஷணம், திரு. P. சுவாமிநாதன் குழுவினர் தேவாரம், திருப்புகழ், பஜனையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

உ

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் இதழ்

"ஞானசம்பந்தம்" திங்களிதழ் 24 ஆண்டுகளாகச் சைவமும் தமிழும் பரப்பிவருவது உலகம் அறிந்தது. தற்பொழுது இருபத்தைந்தாம் ஆண்டிலும் சமயப்பொருள், இலக்கணம், இலக்கியம் முதலியவற்றுடன் தெளிவான கட்டுரைகளை வெளியிட்டுவருகிறது. இதில் சந்தாதாரர்களாக உள்ளவர்களும், புதிய சந்தாதாரராகச் சேர விரும்புகிறவர்களும் சந்தாத் தொகையை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி "ஞானசம்பந்தம்" பெற்றுப் பயன் பெறுவார்களாக.

ஆண்டுச் சந்தா :- உள்நாடு ரூ. 3—00 வெளிநாடு ரூ. 4—00

செயலாளர்: "ஞானசம்பந்தம்" காரியாலயம், தருமையாதீனம், மாயூரம் அஞ்சல், தஞ்சை மாவட்டம்.

மகாகயிலாயதரிசன நினைவுவிழாவில் :



வெள்ளியிரதத்தில் திருக்கயிலாயத் திருவுருவப்படத் திருவீதியுலா.

எதிர்காலம் -திரு. கே. முத்துஜோதிடர்

(பிலவங்கஞு ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய)

(17—8—67 முதல் 16—9—67 முடிய)

1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் நன்னுளில் ராசி பிரவேசம் ஆகி ஒவ்வொருவருக்கும் அவரவர்களின் மனேபீஷ்டங்களை பூர்த்தி செய்து சஸ்ய விருத்திகளையும் தான்ய விருத்திகளையும் கொடுத்து கிரேதாயுகம்போல் பிரகாசிக்கச்செய்யும். இரட்டைப் பட தேதிகளில் அதிக செலவினங்களையும் அலைச்சல்களையும் உண்டுபண்ணும். வெள்ளி, சனி சுபமாகும்.

2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். சதா கிருஷி வேலைகளால் ரொம்பவும் கவலையைக் கொடுக்கும். சிற்சில நஷ்டமான பொருள்கள் தானுக வந்துசேரும். மேலோர் பெரியோர்களுடைய அன்பும் சகல காரிய சித்தியும் உண்டாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் குடும்பத்தொல்லைகள் ஜாஸ்தியாகும். வியாதிகளாலும் விருந்தினர்களாலும் செலவினங்கள் ஜாஸ்தியாகும். உத்தியோகத்தில் சில மாறுதல்களும் சுபமும் உண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் உச்சஸ்தானத்தில் இருந்து - அடுத்த ஸ்தானத்தைத்தரும். விரோதத்தாலும் நூதன சேர்க்கையாலும் கவலை உண்டாகும். தெய்வபலம் ஒதுங்கி நிற்கும். சுபசோபனுதிகள் மூலம் அதிக விரயமாகும். ரொம்பவும் நிதானமாக இருப்பவர்களுக்கு சுபத்தைத்தரும். திங்கள் செய்வாய் சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் சகல காரியங்களேயும் தாமதத்தோடு நடைபெறச்செய்யும். உயர்வான மனிதர்களின் சேர்க்கைகளை மாற்றும் பலபேர் ஏமாற்றம் அடையச் செய்வார்கள். சில நஷ்டங்கள் உண்டாகும். ரொம்பவும் ஜாக்கிரதையாய் உத்தியோகத்தைக் கவனித்துக்கொண்டு குடும்பத்தில் நல்ல பேர் கிடைக்கும்படி நடந்துகொண்டுவர சுபம் உண்டாகும். தெய்வபலம் முன்னின்று காக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

6. கன்னி - உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் சதா தர்மசிந்தனையை உண்டு பண்ணி, நூதனமான முறையில் சகல காரியங்களேயும் வெற்றியடையச்செய்யும். உலக பிரசித்தியையும், ராஜாங்க மைத்ரீகத்தையும் உண்டுபண்ணும். எதிர்பாராத விதமாய் தனதான்யங்கள் விசேஷமாகக் கிடைத்து செலவினங்களும் உண்டாகும். சதா தெய்வ சிந்தனையாகவே இருக்கும். திங்கள், புதன் சுபமாகும்.

7. துலாம் - சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். ஆனாலும் எப்பொழுதையும்விட ஜீவனம் விருத்தியாகும். வியாபாரம் ஓங்கும். எங்கும் நிறைந்த கீர்த்தியும் தனதான்ய விருத்தியும் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மத்தியமான பலனைத்தரும். அதிகவேலைகளும் செலவினங்களும் ஏற்படச்செய்யும். அடிக்கடி இடம் மாறுதலால் சிரமம் உண்டுபண்ணும். ஆரோக்கியமும் குடும்ப சுகமும் ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனூர்ராசி 9 பாதங்களும் சுபசோபனநிகளைத்தரும். புத்திராதிகளால் நன்மை உண்டுபண்ணும். மேலோர் பெரியோர்களின் ஆதரவால் சகல காரியமும் சித்தியாகும். ஆரோக்கியமும் மேதாவி தன்மையும் மேன்மேலும் விருத்தியாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் வரவும் செலவும் சமனுகும். நூதன கட்டிடங்களாலும் பூமி மூலத்தாலும் செலவினங்கள் அதிகமாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். மாதக் கடைசியில் குடும்பத் தொல்லைகளால் அதிகச் செலவினங்கள் உண்டாகும். மேலோர் பெரியோர் அன்பு உண்டுபண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம்-அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி 9 பாதங்களும் விசேஷமான ராஜயோகத்தைத் தரும். இல்லறசுகம், தொழில் அனுகூலம் புத்திராதிகளால் நன்மை, தனதான்ய விருத்தி முதலியவைகள் உண்டுபண்ணும் புதன், வியாழன் சுபமாகும்.

12. மீனம் பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும், ஜாஸ்தி வேலைகளையும் செலவினங்களையும் கொடுத்து நன்மைகளையும் உண்டுபண்ணும். தனலாபமும் ஆரோக்யமும் உண்டுபண்ண சதா முருகனைத்தியானம் செய்துகொண்டுவர எல்லா நன்மைகளையும் உண்டு பண்ணும். வியாழன் வெள்ளி சுபமாகும்

மேற்படி மாதம் நாம் எதிர்பாராமலே பிரவாகங்கள் அதிகமாகி சஸ்யவிருத்தி, தான்ய விருத்திகளெல்லாம் ஏற்பட்டு விலைவாசிகளும் கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்து உலகம் சுபிக்ஷம் அடையும். சகல மக்களும் சகல பாரத்தையும் கடவுளிடம் ஒப்புவித்துவிட்டு பயபக்தியோடு, அவரவர்கள் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவர நடத்திக்கொண்டுவர ஸ்ரீசர்வேச்வரர் ரக்ஷிப்பாராக.

மேற்படி வருஷம் ஷை மாதம் புதன்கிழமை உதயாதி 57 நாழிகைக்கு குருவானவர் கடகராசியைவிட்டு சிம்ம ராசியில் மாக பஞ்சகத்துக்கு பிரவேசிப்பதால் அதாவது (மகம் நக்ஷத்திரம் நான்கு பாதங்களிலும் பூரம் நக்ஷத்திரம் முதல் பாதத்திலும் குருவானவர் சஞ்சரிக்கும்பொழுது மாக பஞ்சகம் என்று பெயர்) ஆகையால் அந்தக்காலத்தில் விவாகம் தூர யாத்திரை உபநயனம் பிரதிஷ்டை முக்கியமாக விந்தியோத்தர தேசத்துக்குள் செய்வது தள்ளுபடி தெக்ஷிண தேசத்திற்கு குரு சிம்மத்தில் இருக்கும்பொழுது எந்தவிதமான காரியங்களும் செய்வது உசிதமல்ல மகா நக்ஷத்திரம் 2ம் பாதத்திற்கு குருவானவர் சென்ற பிறகு வழக்கம்போல் எல்லாம் தக்ஷிண தேசத்திலும் செய்து கொள்ளலாம். மற்றவை யாவும் சுபம்.

சைவாநுட்டான விதியும் விளக்கங்களும்

'தத்புருஷ தேசிகர்' என்னும் தீட்சாநாமம் உடைய, தேவகோட்டை திரு. பாலகவி, வயிநாகரம், வே. இராமநாதன் செட்டியாரவர்கள் தொகுத்தளித்த, 'சைவாநுட்டான விதியும் விளக்கங்களும்' என்னும் நூல் வரப்பெற்றேம். ஆசிரியர் தமது முன்னுரையில் சைவசமயிகட்குச் சிவதீட்சையும், சைவாநுட்டானங்களும் இன்றியமையாதனவாதலை வலியுறுத்தியிருத்தல் காணத்தக்கது. வடமொழி மந்திரங்களைத் தமிழ் எழுத்தில் எழுதும்பொழுது, அவற்றைப் படிப்போர்க்கு வடமொழி உச்சரிப்பு விளங்காதுபோதல் இயல்பே. நூல்களில் வரும் சுலோகங்களை அவற்றின் உச்சரிப்புச் சிறிது பிறழச் சொல்வதால் பெருங்குற்றம் இல்லை. ஆயினும், மந்திரங்களை அவற்றிற்குரிய உச்சரிப்பு முறையில் மாறி உச்சரித்தல் குற்றமாகும். அதனல், மந்திரங்களை வடமொழி எழுத்துக்களிலும் உடன் எழுதிக் காட்டும் முறையைச் சிலர் மேற்கொள்வது உண்டு. எழுதுவோர் அவ்வாறு எழுதிக்காட்டினும், வடமொழியை அறியாதவர்க்கு அவை பயன்படுவதில்லை. இந்நூலுள் அம்முறை இன்றி வடமொழி உச்சரிப்புக்கள் எண் குறிப்பினல் காட்டப்பட்டிருப்பது, மேற்குறித்த குற்றம் நிகழாதிருத்தற்கு வழியாகும். சைவாநுட்டான விதிகள், அவற்றிற்குரிய மந்திரங்கள், முத்திராலட்சணம், முத்திரைப் படம் முதலியவற்றைக் கொண்ட நூல்கள் சில வெளிவந்திருப்பினும், விதிகள் எளிய நடையில் விளக்கமாகக் கூறப்பட்டிருப்பினும், ஒவ்வொரு கிரியையும் எதுபற்றிச் செய்யப்படுகின்றது? அதன் பொருள் என்ன? என்பன போன்ற விளக்கங்கள் விரிவாக அமைந்திருத்தலும், இறுதியில் பன்னிரு திருமுறைப் பாடல்கள் சேர்க்கப்பெற்றிருத்தலும், நல்ல தாளில் பெரிய எழுத்துக்களில் விதிகள் வேறு, விளக்கம் வேருக அழகுபட அச்சிட்டிருத்தலும் இந்நூற்கு உள்ள தனிச் சிறப்புக்களாகும். தியானப் பாடல்கள் ஒவ்வொரு மரபில் கூடவும் குறையவும் இருத்தல் இயல்பு. விதிகளுக்குப் பின்னர்க் கொடுக்கப்பட்டுள்ள மந்திரம், முத்திரை என்பவை, முன்னே இருப்பின், விதிகளைப் புதியனவாகப் படிப்போர்க்கு மலைவின்றி விளங்குதற்கு வாய்ப்பாதல் கூடும். சமய தீட்சை பெற்றுச் சைவாநுட்டானத்தை முறைப்படி செய்வதில் ஆர்வமுள்ளவர்க்கு இந்நூல் சிறந்த வழிகாட்டியாக உள்ளது. இதனை வெளியிட்டோர், தேவகோட்டை, சிவபூசைச் செல்வர், திரு. முத்து. கரு. அரு. கரு. அருணசலம் செட்டியார் அவர்கள். இதன் விற்பனைத் தொகை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்திற்கு உரியதாக்கப்பெறும். விலை 75 காசு. அஞ்சற் செலவு 25 காசு. புத்தகம் வேண்டுவோர் தேவ்கோட்டைச் சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்திற்கு எழுதிப் பெறலாம்.

[சி. அ.]

திருமுறை வெளியீடுகள்

1, திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

முதல் திருமுறை (ராப்பர்)	ரூ.	3—50
இரண்டாவது திருமுறை (காலிகோ)	ரூ.	5—00
மூன்றாவது திருமுறை (காலிகோ)	ரூ.	5—75

2. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

நான்காவது திருமுறை (காலிகோ)	ரூ.	8—00
ஐந்தாவது திருமுறை (காலிகோ)	ரூ.	8—00
ஆறாவது திருமுறை (காலிகோ)	ரூ.	8—00

3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

ஏழாவது திருமுறை (காலிகோ)	ரூ	8 – 00

கிடைக்குமிடங்கள் :-

1. டிரஷரர். ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம்.
   வைத்தீஸ்வரன்கோயில், தஞ்சை ஜில்லா.
2. காஷியர். ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம்
   சீகாழி, தஞ்சை ஜில்லா.
3. காஷியர். ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானம்.
   திருபுவனம், (திருவிடைமருதூர்), தஞ்சை ஜில்லா.
4. காஷியர். ஸ்ரீஅருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானம்,
   திருப்பனந்தாள், கும்பகோணம் வழி.
5. காஷியர். ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானம்,
   திருக்குவளை, நாகப்பட்டினம் தாலூகா.
6. காஷியர், ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானம்,
   திருக்கடவூர், தஞ்சை ஜில்லா.
7. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசாரநிலயம்.
   41, உஸ்மான்ரோடு, தியாகராயநகர், சென்னை, 17.

குறிப்பு:- தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும், தபால் செலவு தனி.

Printed & Published by. K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram (Mayuram) 10—8—67.